Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

**புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்**

மலர் - 25 இதழ் - 2 பிப்ரவரி 2012

தனிப் பிரதி ரூ. 9/-

# ஜெபிக்க வேண்டுகிறோம்



வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் மற்றும் ஏலகிரி மலை YMCA அமைப்பின் நிர்வாகச் செயலாளரும், திருப்பத்தூர் BROWN MEMORIAL H.S.SCHOOL–ன் தாளாளரும், எனது பாசத்துக்குரிய மைத்துனரும், முக்கியமாக திருப்பத்தூர் கிறிஸ்துவின் சபை செயல்பாட்டுக்குப் பக்கபலமாக இருந்தவருமான

## திரு. S. குணசேகரன் M.A.,

அவர்கள்

S.GUNASEKARAN
14-05-1954 - 31-01-2012

31.01.2012 இரவு சுமார் 11.30 மணியளவில் பரம இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்துவிட்டார் என்பதை ஆழ்ந்த வருத்தத்தோடும், அதே வேளையில் மறுமையின் நம்பிக்கையோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.
அன்னாரின் சரீர குடும்பமும், ஆவிக்குரிய குடும்பமும் ஆறுதலும், சமாதானமும் பெற பரம தகப்பனிடம் மன்றாடும்படி மன்றாடுகிறோம்.

– ஆசிரியர்

## ஆசானின் போதனையில்....


1 . ஆசிரியர் உரை ........ 1
2 . ஏன் நாங்கள் பரலோகத்தில் நம்பிக்கை வைக்கிறோம் ? ........ 7
3 . பெண்கள் பகுதி ........ 12
4 . நிழலும், நிஜமும் ........ 15
5 . வாலிபர் பகுதி ........ 19
6 . சிறுவர் பகுதி ........ 22
7 . வசன ரீதியான கிறிஸ்துவின் சபை ........ 24
8 . ஆராதனையும், பொழுதுபோக்கும் ........ 27
9 . மூன்று ஆயக்காரர்கள் ........ 29


- ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.
- M.O. செய்பவர்கள் தகவலுக்கான பகுதியில் உங்கள் தெளிவான விலாசத்தை கண்டிப்பாக எழுதவும்.
- அஞ்சல் வழியில் வேதாகம படிப்பவர்கள் உங்களது தொலை / அலை பேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 25 FEBRUARY 2012 Issue - 2


நிறுவன ஆசிரியர் உரை

# கேடு சூழ்ந்த குடும்பம்

**E.Z. செல்வநாயகம்**

சமுதாயம் என்னும் மாளிகைக்கு குடும்பமே அஸ்திபாரம். அவைகள் கூட்டமாக சமுதாயத்துக்கு வலு சேர்க்கிறது. ஆனால், எல்லாக் குடும்பங்களுமே சமுதாயத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்து விடுவதில்லை. சில குடும்பங்கள் தங்களுக் கும், தங்களைச் சுற்றியுள்ளவர்களுக்கும் அவமானத்தைத் தேடித்தந்து சமுதாயத்துக்குக் கேடு விளைவிக்கிறது. இப்படிப் பட்ட ஒரு குடும்பத்தின் அவல நிலையை மாற்கு தம் நூலில், படம் பிடித்துக் காட்டுகிறார். தயவு செய்து மாற்கு 6:17-28 வரை யுள்ள வசனப்பகுதியை வாசித்துத் தியானியுங்கள்.

இங்கே குறிக்கப்பட்டிருக்கிற ஏரோது, ஏரோது அந்திப்பா என்பவன் ஆகும். இவன், ரோமர் காலத்தில் எப்படியோ ஆட்சி யைப் பிடித்து தக்க வைத்துக் கொண்ட பெரிய ஏரோது என்று வர்ணிக்கப்படும் இதுமேயா நாட்டவனின் மகன்களில் ஒருவன். இந்த கொலைகாரக் குடும்பம் கொன்று குவித்த உயிர்களுக்குக் கணக்கேயில்லை. இந்தப் பெரிய ஏரோது என்னும் கொடியவன் தன் சொந்த மனைவி, இரண்டு மகன்கள் ஆகியோருடைய இரத்தத்தைக் குடித்தவன். இயேசுவைக் கொலை செய்யும் முயற்சியில் பெத்லேகேமில் இருந்த இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகளையெல்லாம் கொல்லும்படி உத்தரவு பிறப் பித்தவன் இந்த சண்டாளன்தான் (மத். 2:16). இந்த கொடிய வனின் வாரிசாகிய அந்திப்பா, தன்னுடைய சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளை அபகரித்துத் தன் மனைவி யாக்கிக் கொண்டான். பிலிப்பு மூலமாக இவளுக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. அவள் பெயர் சலோமி என்று வரலாறு குறிப் பிடுகிறது. ஒழுக்க கேட்டால் உதயமான இந்தக் குடும்பத்தைப் பற்றி வேதாகமம் கூறுவதை கவனிப்போம்.

## I. இது ஒரு சட்ட விரோதமான திருமணம் (வ. 17,18)

பழைய ஏற்பாட்டு பிரமாணத்தின்படி இது ஒரு அசுத்தமான உறவு. (லேவி 20:21). புதிய ஏற்பாடு இதை விபச்சாரம் என்று கூறுகிறது (ரோமர் 7:3). ஆகவே, யோவான் ஸ்நானகன் கர்த்தருடைய ஊழியக்காரன் என்ற முறையில் அது சட்ட விரோதமானது என்று சுட்டிக் கடாட்டினார் (மத். 14:4). ஒரு நாட்டை ஆளும் அரசன் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகச் செயல் செய்யப்பட்டால் அவன் நீதிபரிபாலனம் செய்வது எப்படி? இன்றைக்கு சமுதாயமும், நாமும் சீரழிந்து போய்க் கொண்டிருப்பதற்குத் தலைவர்களும், அரசோச்சுபவர்களும் செய்கிற முறைகேடுகளே காரணம். அதனால் மக்கள் ஒழுக்க நெறிகளுக்குப் பெரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. கற்பு நெறி என்பது பழங்கதையாகிவிட்டது. என் உணர்வுகளைச் சிறந்த முறையில் புரிந்து கொள்கிறார். என் முதல் திருமணம் தவறுதலாக நடைபெற்றுவிட்டது என்பதை இப்பொழுது தான் புரிந்து கொண்டேன். மகிழ்ச்சி தரும் வகையில் வாழ எங்களுக்கும் உரிமை உண்டு என்றெல்லாம் சமாதானம் கூறி தங்கள் ஒழுக்கக் கேடுகளுக்கு நியாயம் கற்பிக்கின்றனர். இப்படிப் பெரும்பான்மையோர் நடந்து கொண்டாலும் தேவனுடைய நீதி வளைந்து கொடுக்காது.

## II. வக்கிரப் புத்தியுடைவர் (வ. 19,20)

சில பேரிடம் அவர்கள் செய்வது தவறு என்று சுட்டிக் காட்டினால் மனம் வருந்தி திருந்தி நடக்க முயற்சி செய்வார்கள். மற்ற சிலரோ மூர்க்க வெறி கொண்டு புத்தி சொன்னவர்களின் மீது சீறிப் பாய்வார்கள். தாவீது அரசனைப் பற்றி நாம் அறிவோம். அவர் உரியாவின் மனைவி பத்சேபாளிடம் முறை கேடாக நடந்து கொண்டதை நாத்தான் தீர்க்கதரிசி கண்டித்தார். அவர் துக்கப்பட்டு தன் தவறுக்காக எவ்வளவு வருந்தினார் என்பதை சங்கீதம் 51ஐ வாசித்து அறிந்து கொள்ளலாம். ஏரோதியாளோ இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவள். தன்னுடைய வாழ்க்கையை விமர்ச்சிக்கிற யோவான் ஸ்நானகனை ஒழித்துக் கட்டத் துடித்தாள். ஆனால், ஏரோது அவளுக்கு இடங்கொடுக்கவில்லை. ஏனெனில், ஸ்நானகனுடைய பரிசுத்தத்தையும், நீதியையும் குறித்து அவனுக்கு பயம் உண்டு (வ. 20).

யோவான் ஸ்நானகன் ஏரோதியாளுக்கு ஒரு அநியாயமும் செய்யவில்லை. நியாயத்தைத்தான் எடுத்துச் சொன்னார். அவளுடைய உள்ளத்திலும், இல்லத்திலும் தேவனுடைய ஆலோசனைகளுக்கும், நீதிக்கும் கொஞ்சம் கூட இடம் கிடையாது. ஆகையால், அவள் எரிச்சல் அடைந்தாள். ஆம், சகோதரர்களே, இன்றைக்கும் அநேகருடைய மனப்போக்கு இதுதான். கர்த்தருடைய ஆலோசனைகளுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து நடப்பது அவசியம் என்ற உணர்வு மங்கி மறைந்து கொண்டிருக்கிறது. அதனால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை விட தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதனைகளைப் போதிக்கும் கள்ள போதகருடைய கட்டுக் கதைகளுக்கு செவி மடுத்து அழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்; உண்மைக்கு எதிர்த்து நிற்கிறார்கள்.

அநேக குடும்பங்களில் சத்திய வேதத்தை விட ஆபாச நூல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. உலக உல்லாசத்துக்கு முதலிடம், ஆண்டவருடைய அருளுரைகளுக்கு அலட்சியம். நல்லொழுக்கப் பயிற்சிகளை விட நடனக் கலைக்கு முக்கியத்துவம். பாவத்தைக் கண்டித்து உணர்த்தும் ஊழியர்கள் பரிகாசத்துக்கும், கண்டனத்துக்குமுள்ளாகிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஓரம் கட்டி ஒழித்துக் கட்ட ஒன்றுபடுகிறார்கள். இத்தகைய இழிந்த வாழ்க்கை நெறிகளின் மீது நாட்டம் கொள்ளும் எந்த சமுதாயமும், எந்த நாடும் உருப்படும் என்று எதிர்பார்ப்பது எப்படி?

## III. சிற்றின்ப கேளிக்கைகளில் ஈடுபாடு (வச. 21,22)

இந்த ஏரோதுவின் பிறந்த நாள் உலக வரலாற்றிலேயே மிகவும் பயங்கரமான விளைவுகளை உண்டாக்கிய விழா என்று சொன்னால் மிகையாகாது. அப்போஸ்தலன் பேதுரு கோடிட்டுக் காட்டியுள்ள சகல தீய காரியங்களும், காம விகாரம், துர்இச்சை, மதுபான வெறி களியாட்டு என்ற அனைத்தும் அங்கே இடம் பெற்றிருந்தன (1பேது. 4:3). இதை துன்மார்க்க உளையென்றும், இதிலே சிக்கிக் கொள்ள விரும்பாத கிறிஸ்தவர்களை உலகம் ஏளனம் செய்யும் என்றும் எச்சரிக்கிறார் (1 பேது. 4:4).

ஏரோதியாளின் மகள் (சலோமி) ஆடிய நடனத்தால் இரண்டு பெரும் புள்ளிகள் தங்கள் தலைகளை இழந்தனர். முதலாவது, ஏரோது மன்னனின் தலை, அதாவது சிற்றின்ப கேளிக்கையும், மதுவும் தந்த மயக்கத்தால் புத்தியையும் நிதானத்தையும் இழந்தான். அதன் விளைவு தான் மதித்து நேசித்த யோவான் ஸ்நானகனுடைய தலையைக் கொய்து கொண்டு வர உத்தரவு பிறப்பித்தான். ஆம், நண்பர்களே, சிற்றின்பக் களியாட்டுகளும், மதுவும் எத்தகைய தீமையான கேடுகளைக் கொண்டு வரும் என்பதைப் பாருங்கள். சலோமியின் அன்பும், பண்பும் அல்ல, மாறாக, அவள் ஆட்டமும் அங்க அசைவுகளுமே அவனை மதியிழக்கச் செய்தன. அந்த நடனத்தை ரசித்து மகிழ்ந்த அத்துணை ஆண்களும் அவனைப் போலவும் அவனை விட அதிகமாகவும் நிதானமிழந்து காமம் தலைக்கேறிய நிலையில் தவித்திருப்பார்கள் என்பதற்குச் சந்தேகம் உண்டா?

இன்றைக்கு எத்தனை கிறிஸ்தவக் குடும்பங்களில் இவ்விதமான ஆட்டங்களும், கூத்துகளும் வரவேற்கப்படுகின்றன. எத்தனை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் இவைகளை கற்றுத் தர வேண்டும் என்று விரும்பி உற்சாகப்படுத்திப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்! பெற்றோர்களே, அவர்கள் உங்களுக்கு மகளாக சிறுமியாக இருக்கலாம். மற்ற ஆண்களுக்கு...? வேண்டாம், இந்த விஷ விளையாட்டு புத்தியைத் தடுமாறச் செய்யும் வழியை அசட்டை செய்ய இடம் கொடுக்காதிருப்போமாக! "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என்று யோவான் எச்சரித்திருப்பதைச் சிந்தித்துப் பாருங்கள் (யோவான் 2:15).

சின்னப் பிள்ளை தானே என்று நீங்கள் நினைக்கலாம் அப்பிஞ்சு உள்ளங்களில் நீங்கள் விதைக்கிற விஷ விதை வளர்ந்து மரமாகி நிற்கும்போது நீங்கள் கதறி அழுவீர்கள் ஐயோ, என் மகள் இப்படித் தகாத வழியில் சென்று கொண்டிருக் கிறாளே, ஐயோ, என் அருமை மகனுடைய போக்கு என் குடும்ப கௌரவத்தை நாற்றமெடுக்கச் செய்து விட்டதே என்று புலம்பு வீர்கள். அது காலம் கடந்த கதறலாகி விடும் - பயன் தராது. ஆகவே பெற்றோர்களே, உஷார்.

## IV. ஒரு நீதிமான் தலையை விலை பேசிய பரிசு (வ. 22-28)

இப்படி ஒரு கொலை பாதக ஆசையை நிறைவேற்றும்படி அவள் கேட்பாள் என்று ஏரோது நினைக்கவேயில்லை. அவன் திகிலடைந்தான். ஆனாலும், முடியாது என்று சொல்ல இயலாத சூழ்நிலை. கௌரவப் பிரச்னை. அவள் வேண்டுகோளை நிறை வேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. அருமையானவர்களே, அவசரப் பட்டு, சிந்திக்காமல் வாக்குறுதிகளை அள்ளி வீசுவது எவ்வளவு ஆபத்தானது என்பதைப் பாருங்கள் ஏரோது மன்னனின் சிந்தனையில்லாத வாக்குறுதியில் ஒரு நீதிமானின் தலை கொய்யப்பட்டது எவ்வளவு கொடுமை! குழந்தைகளை நேசிப்பது, அவர்களுடைய நியாயமான தேவைகளை நிறை வேற்றுதென்பதும், அவர்கள் கேட்டதையெல்லாம் கொடுத்து கெடுப்பதென்பதும் இரண்டு வித்தியாசமான காரியங்கள் நினைவிலிருக்கட்டும்.

### தூய்மையற்ற பிணைப்பு :

பெற்றோர் - பிள்ளைகள் உறவு மிகவும் நேர்த்தியான அனுபவம். தாயும் - பிள்ளையும் ஒத்த குணமுடையவர்களாய் இருப்பது சிறந்தது. தங்கள் எண்ணங்களையும், அபிலாஷை களையும் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியாகவும், அந்நியோந்நிய மாகவும் இருப்பது நியாயம். பெற்றோர்களும், பிள்ளைகளும் (அது ஆண்மக்களாயிருந்தாலும், பெண்மக்களாக இருந்தாலும்) நெருக்கமாக இருக்க வேண்டும். ஆனால், துர்க்குணத்தில் அல்ல. இங்கே ஏரோதியாளும் அவள் மகள் சலோமியும் கொண்டிருந்த நெருக்கம் விஷத் தன்மையுடையது. அது ஒரு பெரிய சதித்திட்டத் தை நிறைவேற்றத் துணைபோன கூட்டு முயற்சி.

ஏரோதியாளின் துன்மார்க்க காரியங்களைக் கண்டித்து உணர்த்த முயன்று ஒர் சான்றோனின் மேல் அவளுக்கு ஏற்பட்டி ருந்த குரோத மனப்பான்மையை தீர்த்துக் கொள்ள மகளைப் பயன்படுத்திக் கொண்டாள். இது சற்றும் எதிர்பாராமல் நடந்து விட்ட பயங்கரம். அநேக பெற்றோர்கள் தங்கள் தீய நோக்கங் களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தங்களின் பிள்ளைகளின் செல்வாக்குகளையும், பதவிகளையும் பயன்படுத்தி அவர்கள் ஆன்மாவை அசிங்கப்படுத்தி விடுகிறார்கள். என்ன, கொடுமை! தாங்கள் செல்வந்தர்கள் ஆகவேண்டும். " பிரபல்யம் அடைய வேண்டும் என்ற ஆசையில் பிள்ளைகளை நடனப் பயிற்சிக்கும் மற்றும் காமக் களியாட்டுகளைக் கற்றுக் கொள்ளவும் உற்சாகப் படுத்தும் பெற்றோர்கள் அவர்களுடைய வாழ்க்கையை எவ்வாறு பாழ்படுத்தி அவர்களை அழிவின் பாதையில் இட்டுச் செல்லு கின்றனர் என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள் ".

## V. ஒரு துயரம் தோய்ந்த வாக்குறுதி நிறைவேற்றம் (வ. 26-28)

தான் மதித்து நேசிக்கிற ஒரு தேவ மனுஷனுடைய, ஒரு நீதிமானுடைய தலையை வெட்டி அதை ஒரு தட்டில் வைத்துத் தர வேண்டும் என்ற அந்தப் பெண்ணின் கொடிய வேண்டு கோளை ஏரோது மன்னன் கேட்டபோது அவன் துடிதுடித்துப் போயிருப்பான்! பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்து, அந்த வாக்குறுதி நிறைவேறா ததால் நன்மையை விட தீமையே உண்டாகும் என்று தெரிந்தால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் தவிர்ப்பதும் விவேகம் தான் அது தவறல்ல. ஆனால், ஏரோது மன்னன் தன் வாக்குறுதி யிலிருந்து பின் வாங்க முடியாதபடி அவன் வறட்டுக் கௌரவம் குறுக்கிட்டது. "கூடப் பந்தியிலிருந்தவர்களினிமித்தம் (வ. 26) அவன் விரும்பாத ஒரு ஆணையை நிறைவேற்ற உத்தரவிட்டான்".

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் வாக்குக் கொடுக்கும்போது விழிப்போடு இருங்கள். அதையும் மீறி ஒரு சூழ்நிலையில் நீங்கள் கொடுத்த வாக்குறுதி எதிர்பார்த்ததற்கு விரோதமான விளைவுகளைக் கொண்டு வருகிறது என்று தெரிய வந்தால் அதை நிறைவேற்றுவதை தவிர்க்கலாம், குற்றமில்லை. பிள்ளைகள், அதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தலாம். வாக்குறுதி கொடுத்துவிட்டு இப்பொழுது தயங்குகிறீர்களே, இது நியாயமல்ல என்று வாதாடலாம். பயங்கரமான விளைவுகளைச் சந்திப்பதை விட வாக்குறுதியைத் தள்ளிப்போடுவது, தவிர்ப்பதும் ஞானமான செயலாக இருக்கும்.

### முடிவுரை :

தேவபயமற்ற ஏரோதின் குடும்ப வரலாற்றை உற்றுக் கவனிப்பீர்களானால், "யோவான் ஸ்நானகனின் சிரச்சேதத்துக்குப் பிறகு ஏரோது மன்னனின் எஞ்சிய வாழ்க்கை நிம்மதியற்றதும், சமாதானம் குறைந்தும் பயம் சூழ்ந்ததுமாக இருந்ததைக் கவனிக் கலாம். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் பிரபல்யத்தை எரோது கேள்விப்பட்ட பொழுது யோவான் ஸ்நானகன் மரித்தோரிலிருந்து எழுந்து வந்துவிட்டான் என்று கூறுகிறான்" (மாற்கு 6:16). எரோது குடும்பத்தில் நடந்த பயங்கரங்களே தேவபயமற்ற எல்லாக் குடும்பங்களிலும் நடைபெறும் என்று நாம் சொல்லவில்லை. ஆனால், ஒன்று நிச்சயம். பாவத்தில் வாழ்கிற, பாவத்தைக் கண்டு அஞ்சாத வாழ்க்கையை மேற்கொள்ளும் எவரும் சாபத்துக்குத் தப்பித்துக் கொள்ளவே முடியாது. ஆகவே, தேவனுக்குப் பயந்து கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வாழும் வாழ்க்கையை மேற் கொள்ள நாடுங்கள். ✳



**தி**ருமறை ஆசான் இதழின் நிறுவன ஆசிரியர் மரியாதைக்குரிய EZ **செல்வநாயகம் ஐயா** அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்து **9.2.2012 உடன் 19 ஆண்டுகள்** நிறைவடைகிறது. அவர் நினைவாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

*ஜெபியுங்கள் !* *பங்கு பெறுங்கள் !!*

# பதினைந்தாம் வேனிற்கால வேதாகம முகாம்

**மற்றும்**

## " *திருமறை தியானம்* " நேயர்கள் &
## " *திருமறை ஆசான்* " வாசகர்கள் கருத்தரங்கம்

**இடம் :**

**YMCA வளாகம், ஏலகிரிமலை (வேலூர் மாவட்டம்)**

**நாள் : மே மாதம் 7,8,9 - 2012 (திங், செவ், புதன்)**

### *சிறப்பம்சங்கள்*

- ✤ கோடையின் கொடுமையிலிருந்தும், வழக்கமான வாழ்க்கை முறையிலிருந்தும் விடுபட்டு, தேவ சமூகத்தில் காத்திருக்க ஓர் அருமையான வாய்ப்பு.
- ✤ தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகைதரும் பரிசுத்தவான்களோடு சங்கமிக்கும் சந்தர்ப்பம்.
- ✤ ஆன்மீக வளர்ச்சிக்கு வழிகோலும் தேவச் செய்திகள்.
- ✤ பக்திப் பரவசமூட்டும் பாடல்கள்.
- ✤ கோடை வாசஸ்தலம் – சமச்சீரான தட்ப வெப்பம்.
- ✤ வாலிபர்கள், பெண்கள், சிறுபிள்ளைகளுக்கென தனித்தனி வகுப்புகள்.
- ✤ குடும்பமாகவும், குழுவாகவும் தங்குவதற்கு தனித்தனி அறைகள்.
- ✤ பெண்களுக்கு தனி இடவசதி.
- ✤ சிறுபிள்ளைகளை உற்சாகப்படுத்த பரிசுகளுடன் கூடிய போட்டிகள்.

**உணவும், தங்குமிடமும் இலவசம்**


**பதிவுக் கட்டணம்**

**பெரியவர்கள் ரூ. 150 /- சிறியவர்கள் ரூ. 100 /-**

## கிறிஸ்துவின் சபை

288, தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

**குறிப்பு : சுமார் 400 பேர் மாத்திரமே தங்க இட வசதி உண்டு. ஆகவே M.O. செய்து முன் பதிவு செய்து கொள்ளுங்கள்.**



# ஏன் நாங்கள் பரலோகத்தில் நம்பிக்கை வைக்கிறோம்?

**J.C. சோட்**

பரலோகம் பற்றி நான் பேசும் போது நான் வானம், மேகம் அல்லது உலகைச் சுற்றி யுள்ள வெளிமண்டலம் பற்றிப் பேசவில்லை. சில நேரங்களில் நாம் இவைகளைப் பரலோகம் என்று கூட குறிப்பிடுகிறோம். ஆனால், நான் உங்களிடம் பேசும் பரலோகம் என்பது, தேவன் வாசம் செய்யக் கூடிய இடம். இது ஓர் அழகான இடம், நீதிமான்களின் வீடு, அங்கேதான் தேவ பக்தியுள்ள ஆத்துமாக்கள் தங்கள் நித்தியத் தைக் கழிக்கும். தேவனுடைய வார்த்தைகளில் பரலோகம் என்பது புதிய எருசலேம் என்று கூட விவரிக்கப்பட்டிருக்கிறது.

வேத வசனங்கள் பரலோகம் பற்றிப் பொதுவாக பேசுகின் றன. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்களைப் பார்த்து கிறிஸ்து இப்படிச் சொன்னார். " சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோ கத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னி ருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத்தேயு 5:12). " *பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக* " (லூக்கா 11:2) என்று ஜெபிக்கும்படியாக இயேசு தம்முடைய சீடர்களுக்கு கற்றுக் கொடுத்தார். மேலும், இயேசு தம்முடைய சீடர்களிடத்தில், "*பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருத யமும் இருக்கும்* " என போதித்தார் (மத். 6:20,21). அப்போஸ் தலர்கள் கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை யிட்ட பிறகு, அவர் அவர்களை நோக்கி, " *பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்* " (மத்தேயு 16:19). இயேசு எழுபது பேரை கட்டளை கொடுத்து வெளியே அனுப்பும் போது, " *இதோ சர்ப்பங்களையும், தேள்களையும் மிதிக்கவும், சத்துரு வினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது. ஆகிலும், ஆவிகள் உங்களுக்கு கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில்*

*எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்* " (லூக்கா 10:19,20).

பரலோகத்திற்கு யாரெல்லாம் போவார்கள்? இயேசு தன்னுடைய நாட்களில் வாழ்ந்த மக்களைப் பார்த்து " *நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்* " என்றார் (மத். 18:3). பச்சிளங் குழந்தைகள், சிறுபிள்ளைகள் அல்லது கணக்கு ஒப்புவிக்க வேண்டிய வயதை அடையாதவர்கள் தங்கள் செயல்பாடுகளுக்கு பொறுப்பாளியாகமாட்டார்கள். எது சரி, எது தவறு என அவர்கள் அறியாதபடியால் அவர்கள் மரிக்கும் போது பரலோகம் போவார்கள்.

கர்த்தருடைய ராஜ்யம் அல்லது சபை பரலோகத்தில் சேர்க்கப்படும். " *அதன் பின்பு முடிவு உண்டா கும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகா ரத்தையும், வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிற வைகளுக்கு ராஜ்யத்தை ஒப்புக் கொடுப்பார்* " என்று பவுல் கூறியுள்ளார் (I கொரி. 15:24). கிறிஸ்து சபை அல்லது சரீரத்திற்குத் தலையாயிருக்கிறார் என்று நாம் எபேசியர் 5:23-ல் வாசிக்கிறோம் (கொலோ. 1:18 ; அப். 20:28). கர்த்தர் அந்த சபையை கறை திரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக ஒப்புக் கொடுப்பார் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும் (எபே. 5:27). மத். 13:40-ல் எப்படி கர்த்தர் தம்முடைய தூதர்களை அனுப்பி ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ்செய்கிறவர்களையும் கூட்டிச் சேர்ப்பார் என்றும் பின்பு அவர்கள் அழிக்கப்படும்படிக்கு அக்கினியிலே போடப்படுவார்கள் என்றும் வாசிக்கிறோம். ஆனால், சபை பரலோகத்திலிருக்கிற தேவனிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் என்பதின் பொருள், நித்திய காலத்திற்கும் நாம் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் சபையிலே இருக்க வேண்டியது கட்டாயம் என்பதே.

உண்மையுள்ளவர்கள் அல்லது கர்த்தருடைய பிரமாணத்தை கைக் கொள்ளுபவர்கள், பரலோகம் போவார்கள் என்று வேதவசனம் சொல்கிறது. கிறிஸ்து வானவர், " *நீ படப் போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணப்பரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்*" என்று சொல்லியுள்ளார் (வெளி. 2:10). யாக்கோபு, "*சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்*" என்று (யாக். 1:12) யோவான் இவ்விதமாக எழுதியுள்ளார். "*ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்* " (வெளி. 22:14).

அதே நேரத்தில், ஒரு குறிப்பிட்ட சாரார் பரலோகத்தில் இருக்கமாட்டார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்று.

இதில் சாத்தான், அவனுடைய தூதர்கள் (மத். 25:41) அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் (மத். 13:41) மற்றும் துன்மார்க்கர் ஆகியோர் உள்ளடக்கம். (I கொரி. 6:9,10; கலா. 5:19-21). வெளிப் படுத்தின விசேஷம் 21:8-ல் நாம் இப்படியாக வாசிக்கிறோம். " *பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்* " என்று. மாயக்காரர் பரலோகம் போகமாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (மத். 24:51). கடைசியாக, மோசம் போகிறவர்களும் மார்க்க ரீதியாகத் தவறு செய்பவர்களும் இழந்து போவார்கள் (II தீமோத். 3:13, ரோமர் 16:17,18).

பரலோகத்தில் யார் இருக்கிறார்? அங்கே தேவன் இருக்கிறார். பரலோகம் ஜீவனுள்ள தேவனுடைய நகரமாக விவரிக்கப்பட்டிருக்கிறது (எபி. 12:22). இயேசு கிறிஸ்து அங்கே இருக்கிறார் (அப். 2:30, 33). தேவனுடைய தூதர்கள் அங்கே இருக்கிறார்கள் (II தெச. 1:7-9).

பரலோகம் எதைப்போன்று இருக்கும்? யோவான் பரலோகத்தைப் பற்றி இப்படி எழுதியிருக்கிறார். பின்பு, "*நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன்; முந்தின வானமும், முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தைச் தேவனிடத் தினின்று பரலோகத்தை விட்டு இறங்கி வரக்கண்டேன்; அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. மேலும், பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பினது. சிங்காசனத்தின் மேல் வீற்றிருதிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும்* புதிதாக்குகிறேன் என்றார். பின்னும், " *அவர் ; இந்த வசனங்கள் சத்தியமும் உண்மையுமானவைகள், இவைகளை எழுது என்றார். அன்றியும், அவர் என்னை நோக்கி : ஆயிற்று, நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன். தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத் தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன். ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்* " (வெளி. 21:1-7).

தொடர்ந்து நாம் வாசிக்கும் போது, யோவான் இப்படியாக எழுதியுள்ளார். பின்பு, " *பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்*

*தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக் குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இரு கரையிலும், பன்னிரெண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவ விருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும்; அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக் குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமூகத்தைத் தரிசிப்பார்கள்; அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள். பின்பு, அவர் என்னை நோக்கி; இந்த வசனங்கள் உண்மையும் சத்தியமுமானவைகள். சீக்கிரமாய்ச் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, பரிசுத்த தீர்க்கதரிசிகளின் கர்த்தராகிய தேவனாவர் தம்முடைய தூதனை அனுப்பினார். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் "* என்றார் (வெளி. 22:1-7).

வெளிப்படுத்தின விசேஷப் புத்தகம் முழுவதுமாக நாம் வாசிக்கும் போது, தேவஆவியினால் ஏவப்பட்ட யோவான் பரலோகத்தில், பொன்னினாலான வீதிகள் இருக்கும் என்றும், பட்டணத்து மதில்களின் அஸ்திவாரங்கள் எல்லாவிதமான விலையேறப்பெற்ற கற்களால் ஆனது என்றும் சொல்கிறார். யோவான் இவ்விதமான வார்த்தைகளைக் கொண்டு இந்த வெளிப்படுத்தின விசேஷத்தைத் தொடங்கினார். " *சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி, தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தினதுமான விசேஷம். இவன் தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் சாட்சியாக அறிவித்திருக்கிறான். இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள் காலம் சமீபமாயிருக்கிறது "* (வெளி. 1:1-3). ஆகையால், யோவான் ஒரு மனிதனாக, எந்த மனிதனும் ஒருபோதும் கண்டிராதவைகளை கண்டு கொள்ள முடிந்தது. பரலோகம் பற்றியும், அதன் எல்லா மகிமை பற்றியும் எழுதுவதற்கு மனிதன் புரிந்து கொள்ளும்படியான வார்த்தைகளை அவர் பயன்படுத்த வேண்டியதாயிருந்தது. எனவே, யோவான் தான் கண்டவைகளில் அதிகமானவைகளை பூமியில் உள்ள பொன் மற்றும் விலையேறப் பெற்ற கல் இவைகளோடு ஒப்பிட்டு உருவக நடையில் எழுதி

யிருக்கிறார். விவரிக்க முடியாத அளவுக்கு பரலோகம் உண்மையாகவே அவ்வளவு அழகானது, அற்புதமானது. வெளிப்படுத்தின விசேஷத்தில் பரலோகம் எப்படி இருக்கிறது என வாசித்துவிட்டு, அதனால் கவரப்பட்டு அங்கே ஒருவர் போக விரும்பினால் கூட, இன்னும் உலகில் பாதிபேருக்குக் கூட நற்செய்தி அறிவிக்கப்படவில்லை என்பது நினைவில் இருக்கட்டும்.

பரலோகம் என்பது ஆயத்தமாக்கப்பட்ட மக்களுக்கான ஆயத்தமாக்கப்பட்ட இடம் என்று ஒருவர் சொல்லியுள்ளார். அது, தேவனும் அவருடைய மக்களும் என்றென்றுமாய் வாழும் ஓர் இடமாக இருக்கிறது. எனவே, மனிதன் இந்த வாழ்க்கையைப் பிரிந்து செல்லும்போது உண்மையாக மரிப்பதில்லை. சரீரப் பிரகாரமாக அவன் மரிப்பான். ஆனால், அவன் ஆத்துமா நித்திய நித்தியமாக வாழும். கர்த்தருக்கு கீழ்ப்படிந்து அவரிடத்தில் உண்மையாயிருப்பவர்கள், ஒரு நாளில் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவார்கள். அங்கே அவர்கள் ஒரு போதும் மரிப்பதில்லை.

பரலோகம் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்வது என்று வரும் போது உண்மையாகவே, அது நம்முடைய புரிந்து கொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது. எனவே, நாம் அதை விசுவாசத்தினால் ஏற்றுக் கொண்டு, பரலோகம் நடைமுறை சாத்தியமாகும் வரைக்கும் அந்த வேளையை நோக்கிக் கடந்து சென்று கொண்டிருக்கிறோம். தேவன் நம்மை ஏமாற்றாமல், நம்முடைய கனவுக்கும், கற்பனைக்கும் மேலாகத் தந்தருளுவார் என்பதில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது.

பரலோகம் செல்ல உங்களுக்கு விருப்பமில்லையா? ஒரு நாளில் நீங்கள் தேவனோடு வாழ வேண்டாமா? இந்த வாழ்க்கையை பரலோகத்திலும் இருந்தால் அது எவ்வளவு பயங்கரமாயிருக்கும். இங்கே அநேக பிரச்சனைகளும், தொந்தரவுகளும் இதயத்தை வலிக்கச் செய்யும் பல சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆனால், இந்த வாழ்க்கைக்கு அப்பால் ஒரு சிறந்த உலகத்தை நம்மால் எதிர்நோக்க முடிந்தால், இந்த வாழ்க்கையை எப்படியோ நாம் கழித்து விட முடியும்.

நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால் நீங்கள் இழந்து போன நிலையில் இருக்கிறீர்கள்; கல்லறைக்கு அப்பால் உங்களுக்கு எந்த நம்பிக்கையும் இல்லை. இதை நீங்கள் உணர்ந்து அதை சரி செய்யும்படி முயற்சிக்க நான் ஜெபிக்கிறேன். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவிலுள்ள உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, இரட்சிக்கும்படி ஞானஸ்நானம் பெற்றால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு ஒரு நாள் பரலோகம் போவதற்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும் (மாற்கு 16:16). இதை நீங்கள் செய்தால் கர்த்தர் உங்களை இரட்சிப்பது மாத்திரமல்ல, உங்களை தம்முடைய சபையிலும் சேர்த்துக் கொள்வார் (அப். 2:47). உங்களுக்கு நேரமும், வாய்ப்பும் இன்னும் இருக்கிறபடியால் நீங்கள் அப்படிச் செய்யும்படி நாங்கள் ஜெபிக்கிறோம். ✱

## பெண்கள் பகுதி

# சபை வளர்ச்சியில் பெண்களின் உதவி

**Sis. ரேச்சல் இராஜநாயகம்**

கிறிஸ்துவுக்குள் மிகவும் அருமையான சகோதரிகளே! இம்மாதமும் உங்களோடு தேவனுடைய காரியங்களை பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். எந்தெந்த வகையில் நாம் நம்முடைய சபை வளர்ச்சியில் உதவி செய்வது என்பது பற்றி வசன ஆதாரங்களுடன் பார்ப்போம்.

நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையில், " போய் சீஷராக்குங்கள் "; (மத். 28:28-20) என்றார். இப்பகுதியை எடுத்து நாம் எப்படி அந்த வேலையைச் செய்ய முடியும் என்று பார்ப்போம். அதற்கு முன்பாக தேவ ஆவியானவர் பெண்களாகிய நமக்கு கொடுத்திருக்கும் ஆலோசனையைப் பார்ப்போம். **"ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்க வேண்டும்".** (1 தீமோ. 2:11,12) இந்த வசனத்தை நம் இருதயத்தில் மறவாமல் வைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். **தேவனுடைய காரியங்களை பிறரிடம் போய் பகிர்ந்து கொள்வதற்கு நாம் சந்தர்ப்பங்களை எதிர்பார்த்தவர்களாக இருக்க வேண்டும்.**

முதலாவது, நாம் ஏன் கிறிஸ்தவர்களாக மாறினோம் என்பதை நம் குடும்பத்தாருக்குச் சொல்ல வேண்டும். யோவான் 1:40,41 ஆகிய வசனங்களில் யோவான் சொன்னதைக் கேட்டு, அவனுக்குப் பின் சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான். மேசியா என்பதற்கு கிறிஸ்து என்று அர்த்தமாம். நாமும் அந்திரேயாவைப் போல் பிறரை அழைத்து வர முடியும்.

மற்றொரு சம்பவம் (அப். 16:14,15)ல் இடம் பெற்றுள்ளது. அது தான் லீதியாளின் மனமாற்ற சம்பவம் என்று நாம் அறிவோம்.

லீதியாள் பவுலின் பிரசங்கத்தை கேட்டாள். பின்பு தன் வீட்டாரோடு கூட ஞானஸ்நானம் பெற்றாள். இவள் பவுலின் போதனையை தன் வீட்டார் கேட்கச் செய்திருக்க வேண்டும். தன் வீட்டாரோடு கூட இந்த லீதியாள் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டாள்.

இரண்டாவதாக, தேவனுடைய வார்த்தைகளைப் படித்து ஆராய்வதற்கு, மற்ற வர்களை, நம் வீட்டிற்கு அழைத்து வருவது. ஆதி திருச்சபையார் இவ்வாறு செய்தார்கள். *தினந்தோறும்* தேவாலயத்திலேயும், வீடுகளி

லேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (அப். 5:42) நாமும் கூட நமக்கருகாமையில் வசிக்கும் பெண்களை நம் வீட்டிற்கு வரவழைத்து அவர்களோடு வேதத்தைப் படித்து தேவன் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார், வேதாகமம் நம்மை என்ன செய்யச் சொல்லி உபதேசிக்கிறது என்பது பற்றி ஆராயலாம்.

*மூன்றாவதாக,* நம்மோடு கூட ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்ளவும், வாரத்தின் இடைப்பட்ட நாளில் நடக்கும் வேத ஆராய்ச்சி வகுப்பில் கலந்து கொள்ளவும் மக்களை அழைத்து வரலாம். புதிய ஏற்பாட்டில் சமாரியா ஸ்திரீ, இயேசுவை பார்த்து, சம்பாஷித்து விட்டு ஊருக்குள்ளே சென்று, *வந்து பாருங்கள்* என்று ஊராரை அழைத்து வரும் சம்பவம் இடம் பெற்றுள்ளது (யோ. 4:28-30,39-42). நாமும் பெண்களிடம் சென்று சபைக்கு வரச் சொல்லி வந்து பாருங்கள் என்று அழைத்து வரலாம்.

*நான்காவதாக,* நாம் நம்முடைய பிள்ளைகளுக்கும், பேரப்பிள்ளைகளுக்கும் தேவனைப்பற்றியும், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் கற்றுக் கொடுப்பதின் மூலம் நம் தலைமுறைகளையும் கர்த்தருக்குள் கொண்டு வர முடியும். தீமோத்தேயு மாயமற்ற விசுவாசத்தை தன் தாயாகிய ஐனிக்கேயாளிடமிருந்தும், தன் பாட்டியாகிய லோவிசாளிடமிருந்தும் பெற்றுக் கொண்டான் என்று 2 தீமோ. 1:5ல் வாசிக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே! மேற்சொன்ன நான்கு காரியங்கள் வாயிலாகவும் நாம் கிறிஸ்துவின் பிரதான கட்டளையை நிறைவேற்ற முடியும். “ போய், சீஷராக்கும்” வேலையை நாமும் செய்யலாம். இதிலும் மேலான காரியம் என்னவெனில் நம்முடைய *வாழ்க்கையின் மூலம்* மற்றவர்களுக்கு. பிரசங்கிப்பது. கிறிஸ்தவள் என்று கூறிக் கொண்டு மற்றவர்களைப் பற்றி முணுமுணுத்தல், சண்டையிடுதல், எதற்கெடுத்தாலும் பொய் பேசுதல், குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஆண் ஏற்க அனுமதிக்காமல் தானே கவனித்தல் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தால் நம்முடைய பேச்சையும், நம் போதனையையும் யார் கேட்பார்கள்? *அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்* (யாக். 1:22) என்ற வாக்கியத்தின்படி வசனத்தின்படி செய்யவும், வாழவும் பழகிக் கொள்ள வேண்டும். நாம் ஒன்றை செய்யும் போது பிறர் அதை கனிப்பார்கள். நம் வாழ்க்கையின் மூலம் பிறருக்கு போதனை செய்யலாம். இப்படிச் செய்யும் போது, நாம் சார்ந்திருக்கும சபையின் வளர்ச்சிக்கு நாம் உதவ முடியும். நம் பிள்ளைகளை சபைக்கடுத்த வேலைகளில் ஈடுபடச் செய்ய வேண்டும். உபதேசத்தில் மிகவும் உறுதியாய் இருக்க வேண்டும். திருமணம், வேலை, உறவு போன்ற காரியங்கள் நாம் உபதேசத்தை விட்டு வழிவிலகிச் செல்ல ஒருபோதும் இடம் கொடுக்கவே கூடாது. இப்படிப்பட்ட குடும்பத் தலைவிகள் இன்றைக்கு சபைக்கு தேவை.

ஆராதனையில் கலந்து கொள்ள முடியாதவர்களைப் போய் சந்திக்க வேண்டும். வருத்தம், நோய், கஷ்டத்தில் இருப்பவர்களிடம் அன்பாகப் பேசி, முடிந்தளவு உதவி செய்ய வேண்டும். வசனத்திற்கு விரோதமாய் பெண்கள் செயல்படும் போது வசனத்தின் அடிப்படையில் அவர்களை அணுகி அன்பாக கண்டிக்கலாம். வீடு சந்திப்புகள் போது மற்ற பெண்களை நம்மோடு கூட்டிச் செல்லலாம். கலா. 6:10ல் உள்ளபடி நமக்குக் கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக் கடவோம். நம்மால் முடிந்தளவு மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். நம்மிடம் உள்ள சிறந்ததை பிறருக்கு கொடுக்கப் பழகிக் கொண்டால் தேவன் அதில் பிரியப்படுவார். நான் என்னுடையதை கொடுக்கிறேனே, எனக்கு யார் கொடுக்கிறார்கள், நான் இதை தியாகம் செய்தேனே, எனக்கு யார் தியாகம் செய்கிறார்கள், பிறர் எனக்கு எந்த உதவியும் செய்யாத போது நான் மட்டும் ஏன் உதவி செய்ய வேண்டும் என்று எண்ணாமல், தொற்காளைப் போல சபையில் உள்ள பெண்களுக்கு உதவி செய்யப் பழகுவோம் (அப். 9:36-39).

இப்படிப்பட்ட காரியங்களை ஒவ்வொரு பெண்ணும் கடைபிடிக்கும் போது நாம் சார்ந் திருக்கும் சபையை ஆவிக்குரிய ரீதியில் வளர்ச்சியடையச் செய்ய முடியும். ஒவ்வொரு குடும்பமும் உபதேசத்தில் உறுதியாய் இருக்கும் போது கட்டாயம் பலமான சபையைக் கட்ட முடியும். குடும்பம் விசுவாசத்தில் வளர வேண்டுமானால் குடும்பத்தில் பெண் முதலாவது தன்னை ஒரு பூரண கிறிஸ்தவளாக வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைக்கு அநேக இடங்களில் சபை வளர்ச்சியடையாததற்கு காரணம் பெண்கள் தான்.

நம் பிள்ளைகள் சபைக்காக வேலை செய்ய அனுமதிக்க வேண்டும். உலகத்தையும், உலகத்தில் உள்ளவர்களையும் நாம் முன் உதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய நலன், நம்முடைய பெயர் இவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சபையின் பெயர் சமுதாயத்தில் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்பதை மையமாக வைத்து காரியங்களை ஆற்றப் பழகிக் கொள்ள வேண்டும்.

இவ்விதமாய் நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டால், நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் பிரதான கட்டளையாகிய *போய் சீஷராக்கு* என்ற வேலையில் நம்மையும் இணைத்துக் கொள்ள முடியும். சாதனைகள் பல புரியும் பெண்களின் உலகத்தில், நாம் இந்தக் கட்டளையை நிறை வேற்றுவதே சாதனை என்று உறுதி பூண்டு செயல்படுவோம். நாம் சார்ந்திருக்கும் சபையின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உறு துணையாய் இருப்போம். ஆமென்!. ✻

# நிழலும், நிஜமும்

(The Shadow and the Reality)

## Bro. ஜேம்ஸ் ராஜ்குமார்

அன்பானவர்களே,

திருமறை ஆசான் மாதாந்திர பத்திரிக்கையை வாசிக்கிற வர்களாகிய உங்களுக்கு நமது மத்தியஸ்தராகிய இயேசு கிறிஸ்து வின் பெயரில் என் உளமார்ந்த நன்றிகளையும், வாழ்த்துக்களை யும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்ற மாதத்தில் பழைய ஏற்பாடாகிய பழைய உடன் படிக்கையை கிறிஸ்தவர்கள் கைக்கொள்ள வேண்டும் என்ற வாதத்திற்கு, பழைய ஏற்பாட்டு காலத்து மக்களுக்கே அது ஒரு சுமையாக இருந்தது என்றும் இன்றைக்கு நாம் புதிய ஏற்பாட டோடு பழைய ஏற்பாட்டையும் சேர்த்து கைக்கொள்வதால் தேவ னை சோதிக்கிறோம் என்ற விளக்கங்களையும் பார்த்தோம். இஸ்ர வேல் மக்கள் வனாந்திரத்திலே தேவனைச் சோதித்தார்கள். அதன் விளைவாக அவர்கள் அனைவரும் ஒரு பெரிய தண்டனையை அடைந்தார்கள், அது என்ன தண்டனையென்றால்; தேவன் அவர் களுக்கு வாக்குத்தத்தம் பண்ணியிருந்த கானான் தேசத்தை அவர்கள் சுதந்தரிக்கவில்லை, அதிலே அவர்கள் ஒரு அடியைக் கூட எடுத்து வைக்கவில்லை. அதாவது, அதிலே அவ்கள் நுழைய வேயில்லை, அநேகர் அந்த தேசத்தைக் கண்ணால் கூடக் காண வில்லை. இப்படி அவர்கள் அன்றைக்கு அவர்களுக்கு நியமிக்கப் பட்ட இளைப்பாறுதலை பெறவில்லை. இது மிகவும் கொடுமை யான செய்தி. அவர்கள் எந்த நோக்கத்திற்காக எந்த ஆசீர்வாதத் திற்காக எகிப்திலிருந்து பயணம் செய்தார்களோ கஷ்டப்பட்டார் களோ அந்த நோக்கத்தை அந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள வில்லை, பெற்றுக்கொள்ளத்தக்க பயணத்தை அவர்கள் செய்ய வில்லை.

அதுபோல இன்றைக்கு நாமும் தேவனைச் சோதித்தால் பரலோக வாழ்வின் வாக்குத்தத்தத்தை நித்திய ஜீவனை இழந்து விடுவோம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அப்படி நம்மில் ஒருவரும் கெட்டுபோவது தேவனுக்குப் பிரியமில்லை என்பதற் காக நம்மேல் அன்புகூர்ந்து தம்முடைய அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் மூலமாக அவர் நம்மை எச்சரிக்கிறார் என்பது மட்டுமல்ல தம்முடைய குமாரனை அனுப்பி இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பதிலும் தாமதமாக இருக்கிறார் என்றே சொல்லலாம் (2 பேதுரு 3:9).

இப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் வாக்கு நமக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அதிலே அவர் "கர்த்தருடைய புஸ்தகத் திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவை களில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்",

(ஏசா. 34:16). இதைத்தான் அப்போஸ்தலர்கள் செய்தார்கள்; "அவைகளை நாங்கள் (அப்போஸ்தலர்கள்) மனுஷ ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்தி காண்பிக்கிறோம்" என்றார். (1கொரி. 2:13). இதை அப்போஸ்தலர்களும் முதலாம் நூற்றாண்டில் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்ட தீர்க்கதரிசிகளும் செய்தார்கள். அதைத்தான் நாம் இன்றைக்கு பின்றபற்ற வேண்டும். மேற்கண்ட 1 கொரிந்தியர் 2:13ம் வசனத்தை இன்றைக்கு அநேகர் தங்கள் அதிகாரமாக எடுத்துக் கொண்டு; நாங்கள் வசனத்தோடு வசனத்தை ஒப்பிட்டு பேசுகிறோம், பரிசுத்த ஆவியானவர் எங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார், நாங்களும் அப்போஸ்தலர்களின் வாரிசுகளான அப்போஸ்தலர்கள் தான், ஆகையால், நாங்கள் சொல்வதெல்லாம் பரிசுத்த ஆவியான வரின் சத்தியம் நாங்கள் சொல்வதை நீங்கள் நம்ப வேண்டும் என்று தவறாக வசனத்தை ஒன்று சேர்த்து, தவறான விளக்கங்களைச் சொல்லி மக்களை தவறான பாதையில் அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவானவர் தம்முடைய அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்த அதிகாரத்தை இவர்கள் தாங்களே எடுத்துக் கொள்ளுகிறார்கள். இது ஒரு வகையான கள்ளத்தனம் ஆகும். இதை நாம் தான் புரிந்து கொண்டு எச்சரிக்கையாக விலகி நிற்க வேண்டும்.

ஆகையால், நாம் நம்முடைய சொந்தக் கருத்தைத் தேடாமல், பேதுருவின் (அப்போஸ்தலரின்) வார்த்தையை கூர்மையாக கவனிப்போம். அப். 15:10-ல் பேதுருவானவர் பயன்படுத்திய வார்த்தையாகிய "நுகத்தடி" என்பது அவருடைய சொந்தக் கருத்து அல்ல. இயேசு கிறிஸ்துவானவர் ஏற்கனவே பயன்படுத்தி, பரிசுத்த ஆவியானவர் பேதுருவுக்கு ஞாபகப்படுத்தின வார்த்தையாகும். மத். 11;28-30-ல் இயேசுவானவர், "வருத்தப்பட்டுப் *பாரஞ்சுமக்கிறவர்களே!* நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; ***என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்;*** அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ***என் நுகம்*** மெதுவாயும், ***என் சுமை*** இலகுவாயும் இருக்கிறது என்றார்". இந்த வசனங்களில் ஆண்டவர், ***பாரம், நுகம், சுமை*** என்கிற வார்த்தைகளைப் பழைய ஏற்பாடு அல்லது பழைய உடன்படிக்கையாகிய மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் குறித்தும், அதன் விளைவாக அந்த காலத்து இஸ்ரவேலர்கள் மனந்திரும்பாமல், தேவனுக்குக் கீழ்ப்படியாத மக்களாக தண்டனைக்காக காத்திருக்கிறார்கள் என்பதைக் குறித்தும் சொல்லி, அவர்களுக்கு நியாயப்பிரமாணத்திலிருந்து இளைப்பாறுதல் தருகிறேன் என்கிற அர்த்தத்தோடு பயன்படுத்துகிறார், இதை நாம் புரிந்துக் கொள்ளும்படி மேலுமான வசனங்களை கவனிக்க வேண்டியது அவசியம். மத். 11:20-24ல் இஸ்ரவேல் பட்டணங்களையும் (இஸ்ரவேலர்களையும்) புறஜாதியார் பட்டணங்களையும் (புற ஜாதிமக்களையும்) இயேசுவானவர் ஒப்பிட்டுப் பேசும் போது: புறஜாதியாரை விட இஸ்ரவேலர்களே தேவனுடைய

அதிகமான கோபத்தின் தண்டனையில் இருப்பதாகத் தெரிவிக்கிறார். இந்த நிலை அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தினாலே வந்ததென்று இயேசுவானவர் அறிந்ததால் அதிலிருந்து அவர்களை மீட்கும் அறிவிப்பை வெளியிட்டார்.

ஏனென்றால், நியாயப்பிரமாணத்தில் இருந்த ஒரு சட்டம் அதன் காலத்தில் வாழ்ந்த அனைவரையும் குற்றவாளிகளாக்கியது. அந்தச் சட்டம் யாக். 2:10ல் சொல்லப்பட்டுள்ளது, "எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக் கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்", இது உபாகமம் 27:26ல், "இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்". இதன்படி அவர்கள் எல்லா சட்டத்திற்கும் கீழ்ப்படிய வேண்டும். அப்படியில்லாவிட்டால் குற்றவாளியாயிருப்பார்கள். அவர்கள் செலுத்தின மிருக பலிகள் அவர்கள் பாவங்களை முழுமையாக நீக்கவில்லை என்பதற்காக அவர்கள் முழுமையான நீதியையும், பரிசுத்தத்தையும், பரிபூரணத்தையும், நித்திய ஜீவனையும் அடையமுடியாத அபாயத்தில் இருந்தார்கள்.

நமக்குத் தெரிந்தவரை நியாயப்பிரமாணம் 600க்கும் மேற்பட்ட சட்டங்களாக இருந்தது. அவைகளில் ஒன்றிலே தவறினால் எல்லா சட்டங்களையும் மீறியதாக எடுத்துக் கொள்ளப்படும், இப்படி எல்லா இஸ்ரவேலர்களும் குற்றவாளிகளாக அல்லது பாவிகளாகவே எண்ணப்பட்டார்கள். அவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாகவே முழுமையான பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள். இதைப்பற்றி வரப் போகிற காலங்களில் விபரமாக தியானிக்கலாம். இப்பொழுது இயேசுவானவர், நியாயப்பிரமாணமாகிய பழைய உடன்படிக் கையின் காலத்து மக்களான இஸ்ரவேலர்கள் அதை சுமக்க முடியாமலும் அதிலிருந்து வெளியே வரமுடியாமலும் இளைப்பாறுதல் இல்லாமலும் இருந்ததற்காக அவர்களை, இளைப்பாறுதல் கொடுக்கிற தம்முடைய புதிய ஏற்பாட்டிற்கு, மெதுவாய் இருக்கக் கூடிய நுகத்திற்கு, இலகுவாய் இருக்கக்கூடிய சுமைக்கு, கிறிஸ்துவின் கீழ் இளைப்பாறுதலுக்கு அவர்களை இயேசுவானவர் அழைத்தார். இதன் கருத்து அல்லது இந்த சத்தியம் அப்போஸ்தலருக்கு (பாலகருக்கு) தேவன் வெளிப்படுத்தியதற்காக பிதாவுக்கு "ஸ்தோத்திரம்" (நன்றி, "I Thank you father",) என்று சொல்லுகிறார் (மத். 11:25-27). ஏனென்றால், பிற்காலங்களில் வரப்போகிற தவறான போதனைக்கு அப்போஸ்தலர்கள் சரியான விளக்கம் கொடுப்பதற்கு இந்த வெளிப்பாடு தேவைப்படும் என்பதையும் இதன் முக்கியத்துவத்தையும் ஆண்டவர் அறிந்து, அன்றைக்கே தம் பிதாவுக்கு நன்றியைச் சொன்னார்.

இவைகள் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைக்கப்பட்டதாக இயேசுவானவர் அங்கே குறிப்பிடுகிறார். நாமும் கூட அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தின விளக்கங்களை விட நம் சொந்த ஞானத்தைப் பயன்படுத்தி சொந்த விளக்கங்கள்,

கருத்துக்கள் போதித்தால் நாமும் கூடத் தவறிப்போகலாம் என்கிற அபாயம் இருப்பதை கவனித்து போதிக்க வேண்டும். தேவன் அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்தினதைத்தான் அவர்க ளுக்குள் ஒருவரான பேதுரு, எருசலேம் விவாதக் கூட்டத்தில் திட்டமாகப் பயன்படுத்தினார். ஆனால், இன்றைய காலத்தில் அநேக பிரசங்கியார்கள் கடன் சுமைக்கும், வியாதிக்கும் வேறு உலக சம்பந்தமான தேவைகளுக்கும் பாரங்களுக்கும் மத். 11:28-30 வசனத்தை பயன்படுத்தி, மக்கள் ஆவிக்குரிய அர்த்தத் தை அறியாதபடி செய்து விடுகிறார்கள். இது ஒரு வகையில் தேவ னுடைய பார்வையில் குற்றமே. இதைக்குறித்து யாக்கோபு தான் நிருபம் எழுதும்போது; "என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகா திருப்பீர்களாக". என்று சொல்லிவிட்டு நாவைப் பற்றி நீண்ட விளக்கமே தருகிறார். ஆண்டவரும் கூட இருதயத்தின் நிறைவி னால் வாய்பேசும் என்கிறார். வசனத்திற்கு தவறான விளக்கம் சொல்கிறவர்கள் முதலாவது தங்கள் இருதயத்தில் அதை சேகரித் துக்கொண்டு அதை வாய் வழியாகப் பேசுகிறார்கள், மத். 12:36.

மேலும் பேதுரு, "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை யினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோமே என்றான் ", அப். 15:11 இந்த வசனத்தில் அவர் புறஜாதி மக்க ளுக்கும், யூதர்களுக்கும் இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவின் கிருபை யினாலே சமமாக வருகிறது நியாயப்பிரமாணத்தினாலே வர வில்லை என்பதை வலியுறுத்துகிறார். இங்கே இன்னொரு அப்போஸ்தலரான யோவானும் அதையே கூறுகிறார், "எப்படி யெனில், நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப் பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின, யோவா. 1:17. யோவானும் கூட பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் வேறுபடுத்திக் காண்பிக் கிறார். அப்போஸ்தலரான பவுல், அப். 25:10,11 வசனங் களில் குறிப்பிட்ட அதே கருத்தை இன்னொரு அப்போஸ்தலரான யோவான், யோவான் 1:17 ஒரே வசனத்தில் ரத்தின சுருக்கமாக குறிப்பிடுகிறார்.

இவ்வாறாக பிதாவாகிய தேவனும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும், கிறிஸ்துவின் அப்போஸ் தலர்களான பேதுருவும், யோவானும், பவுலும், தீர்க்கதரிசியான பர்னப்பாவும், கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாடாகிய மோசேயின் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்பதையே வலியுறுத்துகிறார்கள். மேலும், அந்தக் கூட்டத்தில் கூடிவந்திருந்த யாவரும் அதை ஆமோதிப்பதாக பர்னபா மற்றும் பவுலைப் பேசும்படி செய்து அவர்கள் ஊழியத்தையும் விவர மாகக் கேட்டார்கள். பவுல் பர்னபா கொண்டு வந்த கருத்தை யாரும் எதிர்க்கவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். தொடர்ந்து இதற்கு வலுசேர்க்கும்படி யாக்கோபின் வார்த்தை களை அடுத்த மாதத்தில் கவனிப்போம். ✳

**(தொடரும்)**

வாலிபர் பகுதி

# காயீனின் கருமவினை

Bro. K. சேகர்

திருமறையின் திருவினையையும், அதின் தெய்வீக வாசனை யையும், தித்திக்கும் தமிழோசையில் திங்கள் தோறும் தமிழ் திக்கெங்கும் தென்றலாய் வீசிப்பரப்பும் திருமறை ஆசான் வழி யாய் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியோடு கூடிய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக மனிதர்களாகிய நாம் நல்லவர்களாக இருக்கி றோமோ இல்லையோ, ஆனால், நல்ல கதாபாத்திரங்களையும், நல்ல பண்புகளையும் உடைய மனிதர்களை அதிகமாக அறிந்து கொள்ள விரும்புகிறோம். அது முழுமையான அறிவு அல்ல. ஆன்மீக ரீதியிலும்கூட அது போதுமானது அல்ல. எப்படியெனில், ஒரு காரியத்தில் எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பது பற்றி இரண்டையும் அல்லது நல்லவர் கெட்டவர் என்ற இருவரையும் அறிந்து வாழ்வதே அறிவின் முழுமை. நல்லவர்கள் செய்யும் நல்ல காரியங்கள் மட்டுமே சரி என்போமானால் முதல் நீதிமானாக ஆபேலை மட்டும் வெளிப்படுத்தி, காயீனின் கரும வினைகளை மறைத்திருக்கலாம். எல்லாவற்றையும் ஆராய்ந்து அறிந்திருக்கின்ற சர்வவல்லமையுள்ள தேவன் மனுக்குலம் எப்படியிருக்க வேண்டும். எப்படியிருக்கக்கூடாது என்பதை நன்கு அறிந்து வாழ வேண்டும் என்பதற்காகவே இருவேறு காரியங்களையும் நமக்கு வெளிப்படுத்தியுள்ளார். எனவே, காயீனின் கரும வினைகளைக் கண்டு இனி அவன் வழி செல்லா திருப்போமாக.

## ஆணவச் சிந்தனையும், அலட்சியப் போக்கும்

கர்த்தருக்குக் காணிக்கை செலுத்த வேண்டுமென்று இருவ ரும் நினைத்தனர். அது இருவருக்குமே நல்ல பண்பு. ஆனால், எப்படிக் கொடுக்க வேண்டும். எப்படிக் கொடுத்தால் தேவன் பிரியப்படுவார். அங்கீகரிப்பார் என்பதை ஆபேல் மாத்திரமே தன் உள்ளத்தில் சிந்தித்திருப்பான். ஒரு காரியத்தில் கர்த்தரைப் பிரியப்படுத்துதல் என்பது எவ்வளவு அவசியம் என்பதை இந்தச் சம்பவங்கள் மூலம் நாம் நன்கு அறிந்துகொள்ளலாம். காயீனைப் பொறுத்தவரையில் எப்படிக் கொடுத்தால் என்ன அவரா தின்னப் போகிறார் என்று அலட்சியமாக நினைத்திருப்பான் பாருங்கள், ஆபேல் மந்தையின் தலையீற்றுகளில் கொழுமையானவைகளை கர்த்தருக்குச் செலுத்தினான். காயீன் நிலத்தின் கனிகளை காணிக் கையாகக் கொண்டு வந்தான். தேவன் ஆபேலையும், அவன் காணிக்கையையும் ஏற்றுக் கொண்டார். அவனை ஆசீர்வதித்தார். காயீனையும், அவன் காணிக்கையையும் தேவன் அங்கீகரிக்க வில்லை, அவனை ஆசீர்வதிக்கவுமில்லை. பொதுவாகவே

இருவருடைய செயல்களில் ஒன்றை ஏற்றுக்கொண்டு, இன்னொன்றை நிராகரிக்கின்ற போது அங்கீகரிக்கப்பட்டவர் மகிழ்ச்சியடைவர். நிராகரிக்கப்பட்டவர் துக்கப்படுவர். இது இயல்பு என்றாலும் அங்கீகரிக்கப்பட்டவர், நிராகரிக்கப்பட்டவருக்கு விரோதமாக பெருமை பாராட்டக்கூடாது. நிராகரிக்கப்பட்டவர் அங்கீகரிக்கப்பட்டவருக்கு விரோதமாக எரிச்சல் அடையக்கூடாது.

இங்கு நடந்தது என்ன? அங்கீகரிக்கப்பட்ட ஆபேல் பெருமை பாராட்டவில்லை. மாறாக, காயீன், ஆபேல் மேல் பொறாமை கொண்டான். எரிச்சலடைந்தான் இதைத் தேவன் கண்டு, நீ எரிச்சலடைய வேண்டாம், உன் முகநாடி வேறுபட வேண்டாம், உன் சகோதரன் மேல் பொறாமை வேண்டாம். நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும். அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும். நீ அவனை ஆண்டு கொள்ளுவாய் (ஆதி. 4:6,7) என்று தேவன் காயீனை கடிந்து கொண்டு புத்தி சொன்னார். அவனோ தேவனுடைய ஆலோசனையைப் புறம்பே தள்ளி மாம்சத்தின் கொலை வெறி உணர்வுக்கும், இருத யத்தின் தீங்கான சிந்தனைக்கும் தன்னை ஒப்புக்கொடுத்து தன் னுடைய சகோதரனுக்கு விரோதமாய் எழும்பி, ஆபேலைக் கொலை செய்தான், மாம்ச சிந்தை மரணம் என்பதை காயீன் அப்பொழுதே நிரூபித்துள்ளான் (ரோமர் 8:6).

### பாவத்தின் படியும், சாபத்தின் பிடியும்

அன்பு சகோதரனே, சகோதரியே பாவம் என்பது பார்த்தவுடனே நம்மில் படிந்து விடுவதில்லை. அது படிப்படியாக ஏறி நம்மில் படிந்து விடுகிறது. அது படர்ந்து வருகிறது. தொடத் தொட அது நம்மில் தொடர்ந்து விடுகிறது. இன்றைக்குப் பாவத்தின் பார்வை நம்முடைய இருதயத்தில் எப்படிப்படுகிறது?, பாவத்தின் விரல்கள் நம்முடைய இருதயத்தில் எப்படித் தொடுகிறது என்பதை யோசிக்க வேண்டும்.

ஞானி சாலமோன் சொல்லுகிறார், மதுபானம் இரத்தவருணமாய் இருந்தது பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும் போது நீ அதைப் பாராதே. அது மெதுவாய் இரங்கும். முடிவிலே அது பாம்பைப் போல கடிக்கும். விரியனைப்போல தீண்டும். உன் கண்கள் பரஸ்திரியை நோக்கும். உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும் (நீதி. 23:29-35) என்று சொல்லுகிறார். மது, மாது, சூது இவைகளையன்றி வேறேது தீது. இவைகள் மூன்றும் பாவம், மாம்சமும் மனசும் விரும்புகின்ற சந்தோஷங்கள், பாவமானதைப் பாராதே, தீங்கானதை கேளாதே, தீட்டானதைத் தொடாதே என்று சொன்னால் அவைக்கு பதில் என்ன வருகிறது. இதினாலென்ன? சும்மா பார்த்தாலென்ன? கேட்போம் அவ்வளவு தான். என்ன இது சும்மா தொட்டாக்கூட குத்தமா என்று பாவத்தைக் குறித்து பரிந்துரை செய்து, எதிர்க்கேள்வி கேட்கிறார்கள்.

சகோதரனே, சகோதரியே பாவம், அது ஐயோ பாவம். என்று பரிதாபமாகத் தோன்றினாலும் அது நம்முடைய இருதயத்தில் எப்படி இறங்குகிறது என்பதைக் கவனியுங்கள். அது மெதுவாய் இறங்கும், பாம்பைப்போல கடிக்கும், விரியனைப் போலத் தீண்டும். தப்பிக்கவே முடியாது என்பதையும் தொடர்ந்து அதன் போதனையையும் பாருங்கள். ஆம் என்னை அடித்தார்கள் நோகவில்லை. என்னை அறைந்தார்கள் எனக்கு சுரணையில்லை என்றளவில் பாவம் மனுஷனை ஆண்டு கொள்ளுகிறது (நீதி. 23:35). பாவம் இன்னும் என்ன செய்யுமென்றால், இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும் (யாக். 1:14,15).

இப்படிப் பாவமானது நம்மைப் படிப்படியாக இழுத்துக் கொண்டு, இறுதியில் மரணத்திலும், நரகத்திலும் கொண்டு போய்ச் சேர்க்கிறது. பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23). எனக்கன்பானவர்களே, பாவத்தின் பிடியிலே நின்று கொண்டு, சாத்தானின் பிடியிலே அடிமைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிற யாவரும் எங்கே நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்து கொண்டு துரிதமாக உங்களை மாற்றிக் கொள்ள முயற்சியெடுங்கள். காயீன் தான் செய்த பாவத்தினாலே சாபம் பெற்று சபிக்கப்பட்டவனாயிருந்தான். அவன் நிலம் தன் பலனைத்தராதபடி தேவன் தடுத்தார். அவன் நிலையற்று அலைகிறவனாயிருந்தான். சகோதரனே, சகோதரியே! பாவத்தின் கிரியையை தைரியமாகச் செய்து விட்டான். அதன் விளைவுகளை அவனால் தாங்க முடியவில்லை, சகிக்க முடியவில்லை. ஜீவனுள்ள தேவனுடைய கரங்களில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே (எபி. 10:31). தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறார் (எபி. 12:29). பிரியமானவர்களே தேவனுடைய பலத்த கரங்களுக்குள் அடங்கி ஜீவிப்போம். தேவனுடைய ஆசீர்வாதங்களைச் சுதந்தரிப்போம். ஆமென். ✳

## நாளும், நடப்பும்

1. கூடங்குளம் அணுமின் நிலையம் இயங்கினால் மின் பற்றாக்குறை குறையும் - காங்கிரஸ்
2. பால் பொருள் உற்பத்தி : தமிழகத்திற்கு பிகார் அழைப்பு.
3. உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் மத்திய அரசு தீவிரம்.
4. அன்னிய முதலீட்டை அதிகரிக்க நடவடிக்கை - முதல்வர்
5. உத்திரப்பிரதேசத் தேர்தல் பிரச்சாரம் உச்சத்தை அடைந்துள்ளது.

சிறுவர் பகுதி

# ஆகாயத்து அதிபதி - கழுகு

**Bro. ABEL R. NAYAGAM**

எனக்கு பிரியமான சிறுதம்பி, தங்கைகளே உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணை யற்ற நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து உங்களோடு கூட சேர்ந்து வேதத்தின் காரியங்களை தியானிப்பது மகிழ்ச்சியாயி ருக்கிறது. இந்த மாதம் நாம் எதைப் பற்றி பார்க்கப்போகிறோம் தெரியுமா? "கழுகு"-ஐ பற்றித்தான்.



உலகம் முழுவதிலும் 50க்கும் மேற்பட்ட வகை களான கழுகுகள் உள்ள தாம். கழுகின் அற்புதமான தன்மைகளும், குணாதிசயங் களும் எந்த ஒரு மனிதனா லும் உண்டாக்கப்பட்டிருக்க லாகாது என்று வேதம் நமக்கு போதிக்கிறது. இந்த அற்புதமான பறவையை தேவன் மட்டுமே உண்டாக் கியிருக்க முடியும். சரி நாம் இப்பொழுது அதின் தன்மை களையும், குணாதிசயங் களையும் பார்ப்போம்.

யோபு என்ற உத்தமன் இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். அவரிடம் தேவன் என்ன சொல்கிறார் பாருங்கள். யோபு 39:27ல் " கழுகு உயரத்தி லே தன் கூட்டைக் கட்டுகிறது" என்று ஆம், கழுகுகள் உயரமான மரங்களிலும், உயரமான பாறைகளைக் கொண்ட மலைகளிலும் அதின் உச்சிகளிலும் தன் கூட்டை கட்டுகிறது. ஒரு சில பறவை களைப்போல் குஞ்சுகள் முட்டையிலிருந்து வெளியே வந்தவுடன் கூடுகளை விட்டுச் செல்லாமல், அதன் பழைய கூட்டின் மேலேயே புதிய கூட்டையும் அது கட்டுகிறது. இரீ என்ற ஓர் ஏரியில் (Lake Erie) அப்படி பழைய கூட்டின் மேலேயே புது கூட்டையும் கட்டின ஒரு கழுகின் பெரிய கூடு கிடைத்ததாம். அதின் எடை எவ்வளவு தெரியுமா? 1500 கிலோ.

வேதாகமத்தில் மிகவும் துன்மார்க்கமாக வாழ்ந்த ஏதோமி யர்கள் என்ற ஒரு கூட்ட ஜனம், பெரிய பாறைகளை கொண்ட மலைகளில் குடியிருந்து வந்தார்கள். அவர்கள் அங்கே இருப்பதி னால் யாரும் தங்களை மேற்கொள்ளவும், முற்றுகையிடவும் முடியாது என நினைத்தனர். ஆனால், தேவன் அவர்களுக்கு என்ன கூறுகிறார் தெரியுமா? " *நீ கழுகைப் போல் உயரத்தில் உன்*

கூட்டைக் கட்டினாலும் அங்கே இருந்து உன்னை விழப் பண்ணுவேன் " என்று (எரேமி. 49:16). தேவனுக்கு பயந்து கீழ்ப் படிந்து நடப்பதே நல்லது, பாருங்கள்! இங்கே ஏதோமியருக்கு தேவன் என்ன எச்சரிப்பு தருகிறார் என்று. நாம் அவர்களைப் போல் இருக்கக்கூடாது.

கழுகுகளிடம் உள்ள மற்றொரு அதிசயம் அதன் சிறகுகள் (Wings). அவைகள் அழகாக வடிவமைக்கப்பட்டவைகள். அது கழுகுகள் நீண்ட நேரம் சிரமமில்லாமல் பறக்கவும். உயரமாக பறக்கவும் உதவுகிறது. நீண்ட நேரம் பறக்கும் திறனைப் பெற்ற கழுகுகள் பற்றி ஏசாயா தீர்க்கன் என்ன கூறுகிறார் பாருங்கள் (ஏசா. 40:31). அவைகளின் சிறகுகள் 8 முதல் 9 அடி வரை நீளமானது. அது பறக்க உதவும் முக்கியமான இறக்கை 20 அங்குலம் நீளமுடையது. அதினால் அவைகளால் உயரப் பறக்க முடிகிறது. மனிதன் கண்களால் பார்த்தவரை அவை 10,000 அடி உயரம் வரை பறந்துள்ளன. அதே போல் வேகமாகவும் பறக்கும் திறனுடையது. மணிக்கு 35-55 மைல் வேகத்தில் அவை சிறகடிக் காமல் காற்றில் மிதந்து பறக்கின்றன. ஆனால், அவை சிறகடித்து பறக்கும் போது மணிக்கு 150 மைல் வேகத்தில் பறக்கின்றன.

கழுகுகளின் குஞ்சுகள் உடனே பறக்க முடியாதவை. எனவே, அதை அவைகள் பறக்க அப்பா கழுகும், அம்மா கழுகும் கற்றுத்தருகின்றன. பலவாரங்கள் கழித்து தான் அவை பறக்க பழகுகின்றன. தேவன் ஒரு முறை தம் ஜனமாகிய இஸ்ரவேலை பார்த்து என்ன கூறுகிறார் தெரியுமா? படியுங்கள் யாத். 19:4 இங்கே "*உங்களை கழுகு தன் குஞ்சுகளை சுமப்பது போல் உங்களை சுமந்தேன்*" என்கிறார். பாருங்கள்! தேவனுடைய அன்பு எப்படிப்பட்டது என்று!!

இன்னொரு அதிசயம் அவைகளின் பார்வை. கழுகு தன் இரையை தூரத்திலிருந்து பார்கின்றன. இதைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது. யோபு 39:28,29ஐ வாசியுங்கள்! அதின் பார்வை மிகவும் வியக்கத்தக்கது. அது தண்ணீரின் உள்ளிருக்கும் மீனை 3 மைல் உயரத்திலிருந்து கண்டு கொண்டு அதைப் பிடிக்கு மாம். அப்படிப்பட்ட பார்வை நமக்கு இருக்குமானால் நாம் எதை யாகிலும் படிக்க நினைத்தால், எதை படிக்க வேண்டுமோ அதிலி ருந்து அரை மைல் தூரம் முன்பாக நின்றே படித்துவிடலாம்!!

மேலும், இது நீண்ட ஆயுள் உள்ளவை. பொதுவாக 50 வருடங்கள் வரை கூட உயிர் வாழுமாம். வேதமும் இதைப்பற்றி கூறுகிறது வாசியுங்கள் சங். 103:5.

இப்படிப்பட்ட பறவைகளை படைத்த தேவனுக்கு நன்றி களை கூறுவோம். கழுகுகள் நம் தேவனின் ஞானத்தையும், வல்ல மையையும் வெளிப்படுத்துகிறது. விளக்குகிறது! அப்படிப்பட்ட தேவனுக்கு நாம் பிரியமாய் வாழ இந்த சிறுவயதிலிருந்தே முயற்சி செய்வோம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ✻

## வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

# பாடம் - 16 சபை வழிநடத்துனர்கள்

**Bro. K. பாஸ்கர்**

அன்பான வாசகர்களுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள் வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை இந்தப் பாடம் அடையாளம் காட்டு கின்றது. இன்றுள்ள அநேக சபைகளில் பட்டம், பதவி மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் என்ற பதவிகள் உள்ளன! இவைகள் எல்லாம் வசனத்தில் காணப்படுகின்றதா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள இந்தப் பாடம் வழிநடத்துகிறது.

## I. சபை என்றால் என்ன?

இந்த நூற்றாண்டிலும் சபை பற்றிய பாடத்தில் அநேகர் குழப்பமாக இருக்கின்றார்கள். இன்றும் அநேகர் கட்டிடங்களைப் பார்த்து சர்ச் (சபை) என்றும் கூறுகின்றனர். ஆனால், புதிய ஏற்பாட்டில் கட்டிடங்களை சர்ச், தேவாலயம் என்று கூறுவதில் லை. இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட்டத்தையே சபை (சர்ச்) தேவா லயம் என்று கூறுகின்றது (அப். 2:47; 1 கொரி. 3:16, 17). இரட் சிக்கப்பட்டவர்கள் சபையாக வீட்டிலே கூடி வந்தார்கள் (ரோம. 16:5). எனவே, சபை என்றால் கட்டிடமல்ல, இரட்சிக்கப்பட்ட மக்கள் கூட்டம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இந்தக் கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்றார் (மத். 16:18) புதிய ஏற்பாட்டில் இந்த இடத்தில் தான் முதன் முறையாக சபை என்ற வார்த்தை இடம் பெறுகின்றது. இந்த வார்த்தை கிரேக்க மொழியில் எக்லீசியா என்பதாகும். இதன் பொருள் அழைக்கப்பட்டவர்கள் என்பதாகும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் அழைக்கப்பட்ட வர்களை இயேசு அவருடைய சபையாக கட்டப்போவதாக கூறினார். அவர் சொன்னபடி பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்து வின் சுவிசேஷத்தைக் கேட்டு, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற் றனர். ஏறக்குறைய மூவாயிரம் பேர்கள் ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்பட்டனர். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனு தினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் (அப். 2:37-47). இவ்விதமாக இயேசு கிறிஸ்து தமது சபையைக் கட்டினார். அதற்கு மூலைக்கல் இயேசு கிறிஸ்துவே! (எபே. 2:20) அவர் மேல் ஆவிக்குரிய கற்களாக கட்டப்பட்டு வருகின்றோம் (1பேதுரு 2:4,5). இது தேவனுடைய வீடாகவும், தேவனுடைய சபையாக வும், கிறிஸ்துவின் சபையாகவும் இருக்கின்றது (1தீமோ. 3:15; 1கொரி. 1:2; ரோம 16:16). இன்று அநேக சபைகள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் இயேசு கட்டவில்லை. அவைகள் எல்லாம் மனிதனால் கட்டப்பட்டதாகும்.

## II. சபை வழிநடத்துனர்களை தேவன் நியமிக்கின்றார்

வழி நடத்துனர்கள் தானாக வருவதில்லை. அவர்களை தேவன் நியமிக்கின்றார். உதாரணமாக, மோசே என்பவர் மீதியான் தேசத்திலே ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார். அப்பொழுது தேவன் எகிப்தில் அடிமைகளாக இருக்கின்ற தமது ஜனங்கள் இஸ்ரவேலர்களை எகிப்திலிருந்து விடுவித்துக் கானான் தேசத்திற்கு அழைத்துக் கொண்டு போக மோசேயை அழைத்தார் (யாத். 3:1-10). அவர்களுக்கு வழி நடத்துனராக தேவன் மோசேயை நியமித்தார். அதுபோல, தேவன் பரிசுத்தவான் சீர் பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும் அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார் (எபே. 4:12,13). இதைத் தவிர தேவன் யாரையும் நியமிக்கவில்லை. ஆனால், இன்று அநேக பட்டங்களும், பதவிகளும் உள்ளன. ரெவரெண்டு என்றும், பாதர், பங்கு தந்தை என்றும் உள்ளன.

இயேசு கிறிஸ்து ஊழியம் செய்தபொழுது அநேக மதத் தலைவர்கள் இருந்தனர். அவர்களுக்கு நிறைய பட்டங்கள், பதவிகள் கொடுக்கப்பட்டிருந்தன. அவைகளை ஆண்டவர் மிகவும் கடிந்துகொண்டார். அவர்கள் தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காண வேண்டுமென்று தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி மனுஷரால் ரபீ, ரபீ என்றும், போதகரே என்றும், குருக்கள் என்றும், பாதர் என்றும் அழைக்கப்பட விரும்புகின்றனர். நீங்களோ அப்படி அழைக்கப்படாதிருங்கள். நீங்கள் எல்லாரும் சகோதரர்களாயிருக்கின்றீர்கள் என்றார் (மத். 23:1-10). பட்டங்களையும், பதவிகளையும் விரும்பும் எந்த மனிதரையும் சபை வழிநடத்துனராக தேவன் நியமிக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன் தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (மத். 23:11,12).

இன்று சபையை வழிநடத்துவதற்கு அப்போஸ்தலருடைய உபதேசம் கொடுக்கப்பட்டிருக்கிறது (அப். 2:42, 2 தெச. 2:15) அதன்படி தகுதி வாய்ந்த மூப்பர்கள், போதகர்கள் மற்றும் சுவிசேஷர்கள் இருக்கின்றனர். மற்றபடி கமிட்டி உறுப்பினர்கள், பொருளாளர், செயலாளர் போன்ற பதவிகளைப் பற்றி வேதத்தில் இல்லை. வேதத்தில் இல்லாத காரியங்களைக் குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை. தேவன் நியமிக்கும் வழி நடத்துனர்களை நாம் பின்பற்றுவோம்.

## III. வழி நடத்துனர்களின் பொறுப்பு

சபை வழிநடத்துனர்களுக்கு தேவன் பதவிகளையும், பட்டங்களையும் கொடுக்காமல் பொறுப்புகளைக் கொடுத்திருக்கின்றார். அப்போஸ்தலர் என்பது பட்டத்தையோ, பதவியையோ

குறிப்பதில்லை. "அனுப்பப்பட்டவர்" என்பதாகும். இயேசு கிறிஸ்துவினால் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அனுப்பப்பட்டவர் என்பதாகும். அதுபோல வயதிலே முதிர்ந்தவரை மூப்பர் என்றும் சொல்லப்பட்டுள்ளது, அவர்கள் சபையை மேய்க்க வேண்டும். மேய்ப்பர்கள் (பாஸ்டர்) அவர்கள் தான் சபையை கண்காணிக்க வேண்டும் (பிஷப்) என்றும் புதிய ஏற்பாடு போதிக்கின்றது (அப். 20:17-30). இவைகள் தனித்தனியாக கொடுக்கப்படும் பட்டங்கள், பதவிகள் அல்ல. ஆனால், இன்று அநேக சபைகளில் பாஸ்டர் அவருக்கு மேலாக பிஷப் என்றும் அவருக்கு மேலாக தலைவர் என்றும் உள்ளது. இப்படிப்பட்ட முறைகள் எல்லாம் வேதத்தில் இல்லாதவைகளாகும். மேலும், மூப்பர்களுக்கான தகுதிகள் வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. (1 தீமோ. 3:1-10; தீத்து 1:15-10). ஆனால், தகுதியே இல்லாதவர்களை சபையின் வழி நடத்துனராக இன்றைக்கு நியமிக்கப்படுகின்றனர். இவைகள் அனைத்தும் வேதத்திற்கு முரண்பாடாக உள்ளது. மேலும், மூப்பர்கள், உதவிக்காரர்கள் மற்றும் சுவிசேஷகர்கள் என்பது பதவிகள் அல்ல. தேவன் கொடுத் திருக்கும் பொறுப்புகள் ஆகும். இந்த பொறுப்புகளை ஒவ்வொரு வரும் நிறைவேற்ற வேண்டும்.

தமிழகத்தில் முதல் நூற்றாண்டிலேயே அப்போஸ்தலனாகிய தோமா அவர்கள் மூலமாக சுவிசேஷம் வந்து விட்டது. கிறிஸ்து வின் சபை ஆரம்பமாகி விட்டது. ஆனால், நாம் அறிந்து அரை நூற்றாண்டுகளாகியிருக்கிறது. இந்த ஐம்பது ஆண்டுகளாக கிறிஸ்துவின் சபையின் வளர்ச்சி கனிசமாக வளர்ந்துள்ளது. ஆனால், மூப்பர்கள், உதவிக்காரர்கள் என்ற நிலை இன்னும் வரவில்லை! முதல் நூற்றாண்டிலே சபை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளுக்குள் மூப்பர்கள், உதவிக்காரர்கள் சபை களில் வழி நடத்துனர்களாக இருந்திருக்கின்றனர் (அப். 20:17, பிலி. 1:1). ஆனால், இந்த நூற்றாண்டில் மூப்பர்கள், உதவிக்காரர்கள் என்ற அந்தஸ்து சபைக்கு இன்னும் வரவில்லை! அதற்கு காரணம், ஐம்பது பேர்கள் கொண்ட சபையில் சாத்தான் பிரிவினைகளையும், இடறல்களையும் ஏற்படுத்தி சபையை இரண்டாக, மூன்றாக உடைத்துவிடுகின்றான். ஆதலால் சபை யானது நிறைவான வளர்ச்சியடையாமல் இருக்கின்றது. எனவே மூப்பர்கள், உதவிக்காரர்கள் என்ற நிலை இல்லாமல் உள்ளது. அன்பான தேவனுடைய பிள்ளைகளே, கிறிஸ்துவின் சபையாரே சாத்தானுக்கு இடங்கொடுக்காமல் பிரிவினைகளுக்கு இடமளிக் காமல் சபையை வளர்ச்சிப் பாதையில் வழி நடத்துவோம். மூப்பர்கள் இல்லாமல் சபையானது வசன ரீதியாக இருக்கலாம் சபையும் வளரலாம். இருப்பினும் சபையானது மூப்பர்களைக் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். மூப்பர்கள், உதவிக்காரர்கள், சுவிசேஷகர்கள் மற்றும் போதகர் கள் என்று வழிநடத்துனர்கள் அவசியம் வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அவருடைய விருப்பத்தை நாம் நிறைவேற்றி நம்முடைய பொறுப்புக்களை நிறைவேற்றுமாக! மூப்பர்களை உருவாக்குவதே பிரசங்கியின் பொறுப்பாகும்!. ✳

# ஆராதனையும், பொழுதுபோக்கும்

## Worship and Entertainment

### *Bro. Harvey Porter*

**ந**ம் சமுதாயம் பொழுதுபோக்கிற்குள் மூழ்கிக் கிடக்கிறது. நாம் மிக வேகமான, பரபரப்பான சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம், கவலைகளிலிருந்தும், அழுத்தங்களிலிருந் தும் விடுதலை பெற விரும்புகிறோம். நாம் பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடும் போது பிரச்சனைகளை நாம் மறக்கி றோம். நாம் விளையாட்டுப் போட்டிகளை காணச் செல்கிறோம், அதிகமாக பயணங்களை மேற்கொள்கிறோம். நீண்ட நாட்கள் விடுப்பு எடுக்கிறோம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அதிகமா கப் பார்க்கிறோம். உண்மையாகவே, நம் பிரச்சனைகளுக்கும், கவலைகளுக்கும் ஒரு மாற்று தேவை. நம் வாழ்க்கையின் பல் வேறுபட்ட பகுதிகளில் சமநிலையைத் தக்க வைத்துக் கொள்வது அவசியமாயிருக்கிறது. ஓய்வு, வேலை, படிப்பு, விளையாட்டு, ஆராதனை மற்றும் பொழுதுபோக்கு என்று ஒவ்வொன்றிற்கும் போதுமான நேரத்தை ஒதுக்குவது அவசியமாயிருக்கிறது.

கடந்த பத்து வருடங்களாக பெரும்பாலான சபைகளில் அங்கத்தினர்களின் வருகை குறைந்திருக்கிறது. அதற்குப் பல காரணங்கள் இருக்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. சிலர் ஆராதனையை உற்சாக மற்ற ஒன்று என்கிறார்கள். அவர்கள் ஓய்வெடுப்பதற்கும், குடும்பத்தோடு நேரத்தைச் செலவிடு வதற்கும் பொது விடுமுறை நாட்களில் மட்டுமே நேரம் கிடைக் கிறது என்று சொல்கிறார்கள். அவர்கள் பயணங்களை மேற் கொள்கிறார்கள், மீன் பிடிக்கச் செல்கிறார்கள், விளையாடுகிறார் கள், விளையாட்டு நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கிறார்கள். சிலர், எந்த சபையில் பொழுதுபோக்கு அம்சங்கள் இருக்கிறதோ அங்கே போய் கலந்து கொள்ள விரும்புகிறார்கள்.

இத்தகைய விருப்பங்களை நிறைவேற்றும்படி சில சபைகள் இசைக் கருவிகளை இசைக்கிறார்கள், பாடல் குழுவினரை ஏற்படுத்துகிறார்கள், கைகளைத் தட்டுகிறார்கள், கைகளை உயர்த்துகிறார்கள், இசைக்கேற்ப உடலில் அசைவுகளை ஏற்படுத்துகிறார்கள், பரவச மூட்டும்படியாக இன்னும் சில நடவடிக்கைகளை எடுக்கிறார்கள்.

தாவீதும், தேவனுடைய ஜனங்களும் உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வந்த போது, ஓர் அருமையான ஸ்தோத்திரம் பாடலைப் பாடினர். அது I நாளாகமம் 16:28,29 வசனங்களில் இடம் பெற்றிருக்கிறது. ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும், வல்லமையையும் செலுத்துங்கள்; கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள் கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கைகளைச் கொண்டு வந்து அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுது கொள்ளுங்கள் என்று.

ஆராதனையின் முக்கியத்துவம் ஆராதனை செய்பவரைப் பிரியப் படுத்துவது அல்ல. மாறாக, ஆராதிக்கப்படுபவரைப் பிரியப்படுத்துவது தான். தேவனுக்கு நாம் எதையாவது கொண்டு வர வேண்டும் எனக் கட்டளையிடுகிற அநேக வசனங்கள் இருக்கின்றன. இங்கே தாவீது செலுத்துங்கள் என்று மூன்று முறை சொல்கிறார். நாம் பெற்றுக் கொள்வதெல்லாம் நமக்குப் பரவசத்தை ஏற்படுத்த வேண்டுமென்கிற அவசியமில்லை. ஆனால், நமக்கு எல்லாவற்றையும் தந்து, நம்மில் அன்பு கூருகிற பிதாவாகிய தேவனுக்கு நம்முடைய அன்பையும், போற்று தலையும் வெளிப்படுத்தும் போது நமக்கு கிடைக்கும் மகிழ்ச்சி உற்சாகத்தையும், உள்ளுணர்வையும் ஏற்படுத்துகிறது. இங்கே தாவீது காணிக்கைகளைக் கொண்டு வந்து அவருடைய சந்நிதியில் பிரவேசியுங்கள் என்று சொல்கிறார். இங்கே உலகத்திலிருந்தும், நம்முடைய அன்றாட நிகழ்வுகளிலிருந்தும் நாம் வெளியே வந்து, தேவனுடைய தூய பிரசன்னத்தில் நிற்கிறோம். நம்முடைய கரங்களில் காணிக்கை இருக்கிறது. அதன் பொருள், நாம் அவருக்கு எதையாவது கொடுக்கிறோம்.

இப்படிச் செய்வது பரவசமூட்டுகிறதாயிருக்கிறதல்லவா? ஆம்! ஆனால், இந்த உலகப் பரவசம் போலல்ல. இது ஆழ்ந்த அன்பிலிருக்கும் இருவர் போன்றது. அங்கே, ஒருவர் மற்றவரிடம் தன் நேசத்தை வெளிப்படுத்துகிறார், அங்கே, ஒரு விலையுயர்ந்த பரிசு கொடுக்கப்படுகிறது. அவர்கள் இருவருக்குமிடையில் ஓர் இனம் புரியாத உணர்வு ஏற்படுகிறது, அன்பு உணரப்படுகிறது, அனுபவிக்கப்படுகிறது. இந்த உறவு இன்னும் பலப்படுத்தப் படுகிறது. ஆராதிப்பவர் தேவன் மீது கவனத்தைச் செலுத்துகிறார், தன் மீதல்ல.

இவ்வகையான ஆராதனையில் அலங்காரம் இருக்கிறது. இது ஆராதிக்கிற ஒவ்வொருவருடைய மனதிலும், இருதயத்திலும் இருக்கிறது. உண்மையான பரிசுத்த அலங்காரத்துடனே தம்மை யார் ஆராதித்தார்கள் என்பது தேவனுக்கு மட்டுமே தெரியும். ✳

# மூன்று ஆயக்காரர்கள்

## THREE PUBLICANS

*Tomijo Brown*

மூன்று ஆயக்காரர்கள் பற்றி விவாதிப்பதற்கு முன் பாக, அவர்கள் மற்ற யூதர்களால் எப்படிப் பார்க்கப்பட்டார்கள் என்று தெரிந்து கொள்வது நல்லது. அரசாங்கத்தால் ஒரு குறிப்பிட்ட தொகையை மக்களிடமிருந்து வசூல் செய்யும் கடமை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அதை சாக்காக வைத்துத் தங்கள் நாட்டு மக்களிடமிருந்து கூடுதலான தொகையை வலுக்கட்டாயமாக வசூல் செய்திருக்கிறார்கள், அவர்களுக்கு அந்த வாய்ப்பு இருந்தது. இதன் விளைவாக, மக்களிடமிருந்து அநியாயமாக பணத்தை வசூல் செய்திருக்கிறார்கள். இதன் காரணமாக இவர்கள் அநேகரால் வெறுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இயேசு ஒரு திமிர்வாதக்காரனை சுகப்படுத்தி விட்டு, கடந்து போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்து கொண்டிருந்த லேவியைக் (மத்தேயு) கண்டு எனக்குப் பின் சென்று வா என்றார். அவன் எழுந்து, அவருக்குப் பின் சென்றான் (மத்.9:9, மாற்கு 2:1317, லூக்கா 5:2732).

லேவி இயேசுவைப் பின்பற்றுவதற்கு முன்பாகத்தன் காரியங்கள் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்துவதற்காகக் காத்திருக்கவில்லை, எல்லாவற்றையும் விட்டு விட்டு இயேசுவுக்குப் பின் சென்றான்.



இந்த லேவி மற்ற ஆயக்காரர்களைப் போல் செல்வந்தராகத்தான் இருந்திருக்கிறார். ஆனால், எல்லாவற்றையும் விட்டு விட்டு இயேசுவுடன் சென்று விட்டார். மாறாக, நாம் நம்முடையவைகளை நாமே வைத்துக் கொள்ள விரும்புவதால் இயேசுவைப் பின்பற்ற தயக்கம் காட்டுகிறோம் (லூக். 18:23). நம்முடைய உடைமைகள், வருமானம், இன்னும் உலகப் பிரகாரமான காரியங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கலாம். ஆனால், இவைகளெல்லாம் இறுதியில் ஒன்றுமில்லாமல் போய் விடும். இயேசுவைப் பின்பற்றுவதற்கு தேவையானால் இவைகளையெல்லாம் விட்டு விட விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும். செல்லுஞ் செலவை சரியாகக் கணக்குப் பார்த்த பிறகே நாம் இயேசுவைப் பின்பற்ற வேண்டும், ஆனால், இயேசுவைப் பின்பற்றாததற்கான விலை, அவரைப் பின்பற்றுவதற்கான விலையை விட *அதிகமானது என்பதை நாம் எப்போதும் அறிந்திருக்க வேண்டும்.* ஆகையால், இயேசுவுக்காக எதை வேண்டுமானாலும் விட்டு விடத் தயாராக இருக்க வேண்டும்.

மத்தேயு மற்ற ஆயக்காரர்கள் போலவே பாவிகளோடு தான் பட்டியலிடப்பட்டிருந்தார். இயேசு மத்தேயுவோடும், பிற ஆயக்காரர்களோடும் போஜனம் பண்ணும் போது அதைப் பார்த்த வேதபாரகரும், பரிசேயரும் அவருடைய சீஷர்களைப் பார்த்து *உங்கள் போதகர் ஆயக்காரரோடும், பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்னவென்று கேட்டார்கள்* (மத். 9:11). அதற்கு இயேசு *பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதே அல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை* என்றார் (மத். 9:12).

வேதபாரகரும், பரிசேயரும் பாவமுள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால், தங்கள் சுய நீதியால் அதை அறியாதிருந்தார்கள். அவர்கள் தங்கள் கண்களிலிருந்த உத்திரத்தை அறியாமல் மற்றவர்கள் கண்களிலிருந்த துரும்பைப் பெரிதாகப் பார்த்தார்கள் (மத். 7:5). நாம் பாவிகளென்பதையும், நம் ஜீவியங்களில் தவறும், தோல்விகளும் இருக் கிறதென்பதையும் நாம் எப்போதும் அறிந்திருக்க வேண்டும். நம் ஜீவியங்கள் எப்போதும் பூரணமாக இருப்பதில்லை. ஆயினும், தங்கள் வாழ்க்கையில் தேவன் தேவை என்னும் நிலையிலுள்ளவர்களுக்கு நாம் உதவி செய்வது அவசியம்.

இந்த மத்தேயு ஒரு ஆயக்காரனாக இருந்தாலும், இயேசு ஏதோ ஒரு விசேஷித்த தன்மையை அவனிடத்தில் கண்டார். அதைக் கொண்டு பாவிகளுக்கு சுவிசேஷத்தைக் கொண்டு செல்ல முடியுமென்று கண்டார். இவர்களெல்லாம் எதற்கும் லாயக்கில்லையென்று பார்க்கப்படுகிறவர்கள். நம் பரமபிதாவுக்கு ஊழியஞ் செய்யும்படியாக, நாம் அவர்களுக்கு உதவி செய்ய முடியும்.

லூக்கா 18 ஆம் அதிகாரத்தில் நாம் காணும் உவமையில், அந்த பரிசேயனுடைய ஜெபத்திலிருந்தும், ஆயக்காரனுடைய ஜெபத்திலிருந்தும் நாம் அநேக பாடங்களை கற்றுக்கொள்கிறோம். அந்த பரிசேயன் பெருமையோடு ஜெபிக்கத் தொடங்கினான். முதலில், தான் செய்யாத காரியங்களினால் தேவனுடைய கவனத்தை ஈர்க்கப் பார்த்தான். அவன் நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்றான். ஒரு வேளை இந்த பரிசேயன் மேற்சொல்லப்பட்ட பாவங்களைச் செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால்,அவன் மாயமாலம் என்கிற பாவத்தை செய்து விட்டான் (மத். 6:5).

பெருமை, கர்வம், சகிப்புத் தன்மையின்மை போன்றவற்றிற்காகத்தன் இருதயத்தைப் பார்க்க வேண்டிய அவன், மற்றவர்களின் குறைகளைப் பார்த்தான். தான் செய்தவைகளைக் கொண்டு தன் காரியங்களைப் பார்க்காமல், தான் செய்யாதவைகளைக் கொண்டு பார்த்தான்.

அதற்கு மாறாக, இந்த ஆயக்காரன் தன் ஜெபத்தில் யாரைப் பற்றியும் தீர்ப்புச் செய்யாமல், தேவ சமூகத்தில் மனத்தாழ்மையையும், பக்தியையும் வெளிப்படுத்தினான். கிறிஸ்தவர்கள் பலர், தங்களுடைய பெலவீனத்தையும், பாவத்தையும் மறந்து மற்றவர்களைக் குறை கூறுகிறார்கள். பல நேரங்களில், நாம் செய்கின்ற நன்மையான காரியங்களில் மகிழ்ச்சி கொள்வதற்குப் பதிலாக, மோசமான காரியங்களென்று நாம் நினைக்கிற செயல்களைச் செய்யாமலிருப்பதற்காகப் பெருமைப்படுகிறோம். ஒருவன் தேவனிடத்தில் நெருங்கிச் சேர்வதற்கு நாம் உதவி செய்வதற்கு வாய்ப்புள்ள ஒருவரை நாம் கண்டால், அவரிடமுள்ள குறைகளை சுட்டி காட்டுவதற்கு பதிலாக, அவருக்கு உதவி செய்வதற்கான ஞானத்தை எனக்குத் தாரும் என்று நாம் தேவனிடத்தில் கேட்க வேண்டும். அப்படி ஜெபித்த பிறகு, அவருக்கு தேவையான வழிகளில் நாம் உதவி செய்ய வேண்டும்.

இயேசுவால் ஆசீர்வதிக்கப்பட்ட மற்றுமொரு ஆயக்காரன் சகேயு. இந்த சகேயு குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் இயசுவைக் காண முடியவில்லை (லூக். 19:110). ஆயினும், அது அவருடைய நோக்கம் நிறைவேறத் தடையாக இருக்க அவன் அனுமதிக்கவில்லை. இயேசுவை எளிதாக நெருங்கி விடும் தருணத்திற்காக அவன் காத்திருக்கவில்லை, ஆனால், அவன் முன்னாக ஓடி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு சகேயுவின் வீட்டில் தங்க சம்மதித்தபடியால் இயேசுவால் உடனடியாக பலனளிக்கப்பட்டான்.

கிறிஸ்தவர்களாக நாம் அடிக்கடி இயேசுவிடமிருந்து தூரமாக நிற்கிறோம். ஏனென்றால், நாம் அற்பமானவர்களென்றும், கொடுப்பதற்கென்று நம்மிடம் கொஞ்சம் தான் இருக்கிறதென்றும் உணர்

கிறோம். தேவனிடமும், கிறிஸ்துவிடமும் கிட்டிச் சேர்வதற்குப் பதிலாக நம்முடைய இயலாமையைக் குறையாகச் சொல்லி தேவனை விட்டு வெகு தூரத்திற்கு விலகிச் சென்று விடுகிறோம். நம் இருதயங்களையும், நம்மையும் உற்றுப் பார்த்தால், தேவனிடத்தில் நாம் கிட்டிச் சேர அநேக காரியங்களைக் கண்டுபிடிக்க முடியும்.

சகேயு தன் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்க முன் வந்தான். மேலும், தான் யாரிடத்திலாவது அநியாயமாக வரி வசூலித்ததுண்டானால் நாலத்தனையாகத் திருப்பிக் கொடுக்க முன் வந்தான். தங்கள் வருமானத்தில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிற, சுவிசேஷம் பிரசங்கிக்கப் படக் கொடுக்கிற பிறரை கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தும்படியாய் அவர்களைப் போய் சந்திக்க, தனிமையில் இருப்பவர்களுக்கு உதவ ஒரு வேளை சில கிறிஸ்தவர்கள் இருக்கலாம். தன் தானியங்களையும், பொருள்களையும் சேர்த்து வைக்கக் களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்ட நினைத்த அந்த மனிதனைப் போல இல்லாமல், இயேசுவைப் பின்பற்ற அதிகமாகக் கொடுக்க சகேயு விரும்பினான். (லூக். 12:13- 21). தேவையில் இருப்போரைப் பார்க்கும் போது இதைச் செய்ய நாம் விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும்.

இந்த மூன்று ஆயக்காரர்களிடமிருந்து பிரதானமான மூன்று பாடங்கள் : 1. மத்தேயு இயேசுவைப் பின்பற்றும்படி எல்லாவற்றையும் விட்டுவிட ஆயத்தமாக இருந்தார். தேவைப்பட்டால் எல்லாவற்றையும் விட்டுவிட நாம் விருப்பமுள்ளவர்களாயிருக்க வேண்டும். 2. ஜெபித்த அந்த ஆயக்காரன் தேவனிடத்தில் தாழ்மையையும், மரியாதையையும் காட்டினான். நாமும் எப்போதும் தாழ்மையுள்ளவர்களாகவும், மரியாதையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். 3. சகேயுவின் ஆவலும், தான் இயேசுவின் அருகில் இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளும்படி தன்னுடையதைப் பயன்படுத்தின விதமும் கவனிக்கத்தக்கவை. நாமும் இயேசுவிடம் கிட்டிச் சேர்ந்து அவருக்கு சேவை செய்ய உறுதியான ஆசை கொள்ள வேண்டும்.

நாம் கிறிஸ்துவுக்காக வாழப் பாடுபடும் போது இந்த மூன்று ஆயக்காரர்களும் நமக்கு சிறந்த முன் மாதிரிகளாக இருப்பார்கள். இதைக் குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள். இந்த மூன்று ஆயக்காரர்களுடைய வாழ்வில் நாம் கண்ட இந்த குணாதிசயங்களை நடைமுறைப்படுத்தாவிட்டால் நாம் கிறிஸ்துவுக்குப் பிரியமாக இருக்க முடியாது. நாம் கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வர சிலரை சந்திக்கும்போது வெறும் அடையாளங்களை அல்ல, ஒரு மனிதனுடைய உண்மையான மதிப்பைக் கண்டறிந்து அந்த நபரை கிறிஸ்துவினிடத்தில் கொண்டு வந்து அவருக்கு சேவை செய்ய உதவ வேண்டும். ✳

# BIBLE MEDITATION

## TV PROGRAM

| | |
|---|---|
| TAMILAN TV - | Saturday 7.15 am. |
| POTHIGAI TV | Sunday 5.30 am. |
| TAMILAN TV - | Monday 7.00 am. |

**கிருபையுள்ள வார்த்தை** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


பேச்சாளர் : **சகோ. பிலேமோன் ராஜா**, மதுரை.

| | | | | |
|---|---|---|---|---|
| பொதிகை | TV | சனி | காலை | 5:30 மணி |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 10:00 மணி |

**கிறிஸ்துவின் வசனம்** தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

பேச்சாளர் : **சகோ. அர்ச்சுணன்**, வத்தலக்குண்டு.


| | | | |
|---|---|---|---|
| தமிழன் | TV | திங்கள் | காலை 6:00 மணி |
| தமிழன் | TV | சனி | காலை 6:15 மணி |





**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**


| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815 New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday to Friday | 5.30 - 5.45 | Box. 80 Kakinada - 533 001 | Joshua Gootam |
| TAMIL | Sunday Thursday Friday | 6.45 - 7.00 p.m. 5.45 - 6.00 p.m. 5.30 - 5.45 p.m. | Box. 8405 Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No: 4766/87- Postal regn. No: Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014




( தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக்கொள்ளலாம் )

# திருமறை தியானம்


## தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்


| | | | | |
|---|---|---|---|---|
| **பொதிகை TV** | ஞாயிறு | காலை | 5:30 | **மணி** |
| **தமிழன் TV** | திங்கள் | காலை | 7:00 | **மணி** |
| **தமிழன் TV** | சனி | காலை | 7:15 | **மணி** |

சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.


– ஆசிரியர்

கீழ் காணும் கைப்பிரதிகள் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.






## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

**ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.**

**விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு**
**ரூ. 100/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam.